விலை சதம் 15

# சுதந்திரன்
# SUTANTIRAN




வள்ளுவர் ஆண்டு 1999, சித்திரை ௳ 7 (19-4-68) வெள்ளி முஹறம் 20 — புத்தகம் 22 இதழ் 31

# தமிழ் துவேஷத்தைத் தூண்ட புதிய சிங்கள அரசியற்கட்சி?


தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான துவேஷப் பிரசாரத்தையே அடிப்படையாகக் கொண்டு புதிய அரசியற் கட்சியொன்று தென்னிலங்கையில் உருவாகுவதற்கான சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன. இந்தக் கட்சிக்குபக்க பலமாக நின்று பிரசாரம் செய்வதற்கு அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட ஓர் பத்திரிகை நிறுவனமும் தயாராக இருப்பதாக கூறப்படுகிறது.

கடந்த பொதுத் தேர்தலின் பின் தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டதும், தமக்கு கவர்னர் ஜெனரல் பதவி கிடைக்கலாம் என்று எதிர்பார்த்து ஏமாற்றமடைந்த ஒரு பிரமுகர் இக் கட்சியின் தலைவராக வரலாமென்று தெரிகிறது.

இக் கட்சியின் அடிப்படைக் கொள்கை தமிழ் பேசும் மக்களுக் கெதிரான துவேஷமாக வேயிருக்குமென்றும், இலங்கை முழுவதும் சிங்களவர்களுக்கு மட்டுமே சொந்தமென்றும் தமிழர்களுக்கு இந்நாட்டில் இடமே கிடையாதென்றும் இக்கட்சி பிரசாரம் செய்யுமாம்.

இக்கட்சியில் சேர்வதற்கு சுதந்திரக்கட்சி எம். பிக்கள் சிலர் உட்பட ஆதரவாளர் பலர் முன்வந்துள்ளார்களாம்.

மாவட்ட சபை மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதைத் தொடர்ந்து இக்கட்சி அங்குரார்ப்பணம் செய்யப்படுமென்று தெரிகிறது.




யாருக்கு அஞ்சலி?

## "நீதிமன்றங்களிலும் சிங்களத்தை திணிப்போம்"

## என். எம். சொல்கிறார்

உத்தியோக மொழியான சிங்களத்தை நாடு முழுவதும் அமுல் நடத்த உறுதி பூண்டுள்ளோம். நாடு முழுவதிலுமுள்ள நீதிமன்றங்களிலும் உத்தியோக மொழியான சிங்களத்திலேயே சகல நடவடிக்கைகளும் இடம் பெறும். உத்தியோக மொழியை குறுகிய காலத்தில் பரிபூரணமாக அமுல் நடத்துவதற்கு நடவடிக்கை யெடுப்போம்.

அதேநேரத்தில், சிங்களம் மட்டுமே நாட்டின் உத்தியோகமொழி என்ற கொள்கையை உறுதிப்படுத்தும் வகையில் 1966ம் ஆண்டு தேசிய அரசாங்கம் கொண்டு வந்து நிறைவேற்றிய தமிழ் மொழி சட்ட விதிகள் மாற்றியமைக்கப்படும்''

—இப்படிக் கூறுவது யார் தெரியுமா? தமிழர்களின் இரட்சகர் என்று இடதுசாரித் தோழர்கள் முன் வர்ணித்த சம அந்தஸ்து வீரர் டாக்டர் என். எம். பெரேராவே தான்.

### இரஷ்யாவில்

**'இலக்கியம்' படும் பாடு!**

புஷ்கின் எழுதிய பெருங் காவியத்தின் நாயகன் முற்போக்குவாதியா — இல்லையா என்பதை நெட்டுரு செய்வதிலேயே இன்றைய இரஷ்ய மாணவனின் நேரமெல்லாம் கழிந்துவிடுகிறது. இலக்கியத்தை இப்படி 'முற்போக்கு' எண்ணங்களோடும் 'பிற்போக்கு' எண்ணங்களோடும் இணைத்து, கற்பிப்பதைவிட, மாணவர்களுக்கு இலக்கியமே கற்பிக்காமல் இருந்துவிடுவது நல்லது'

என்று விளாடிமிர் தேந்திரியா கோப் என்ற இரஷ்ய எழுத்தாடர், 'லிட்ரெரரிகெஜட்', என்ற இரஷ்யவார ஏட்டில் எழுதியிருக்கிறார்.

கூட்டாட்சிவாதிகளின் பொதுத் திட்டத்தில் மொழிக் கொள்கை பற்றி விளக்கி 'நேஷன்' என்ற ஆங்கில ஏட்டில் எழுதியுள்ள ஓர் கட்டுரையி

(4-ம் பக்கம் பார்க்க)

## யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளர் அலுவலகங்களை இணைப்பதற்கு தமிழரசு வாலிபமுன்னணி கடும் ஆட்சேபம்

**யாழ்ப்பாணப் பகுதியில் இயங்கிவரும் இரு கூட்டுறவு உதவி ஆணையாளர் அலுவலகங்களையும் இணைக்கும் முயற்சிக்கு தமிழரசு வாலிப முன்னணி கடுமையான ஆட்சேபம் தெரிவித்துள்ளது.**

இது சம்பந்தமாக தமிழரசுத் தலைவர் திரு. செல்வநாயகத்துக்கு வாலீப முன்னணி நிர்வாகச் செயலாளர் திரு. பாலசிங்கம் அனுப்பியுள்ள ஒரு மனுவில் கூறப்பட்டிருப்பதாவது:—

யாழ்ப்பாணப் பகுதியில் இயங்கிவரும் ஆயிரத்திற்கு மேற்பட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களை பரிபாலித்து வரும் யாழ். மேற்கு கூட்டுறவு உதவி ஆணையாளர் அலுவலகத்தையும், யாழ். கிழக்கு கூட்டுறவு உதவி ஆணையாளர் அலுவலத்தையும், ஒன்று சேர்த்து ஒரு உதவி ஆணையாளரின்கீழ் ஒரு அலுவலகமாக மாற்றியமைக்க கூட்டுறவு இலாகா நடவடிக்கை மேற் கொள்ள இருப்பதாக நம்பகரமாக அறிகின்றோம்.

மேற்படி இலாகாவின் இந்த நடவடிக்கையை உடன் நிறுத்தாவிடில் யாழ்ப்பாணப் பகுதி கூட்டுறவு அபிவிருத்தி மிகவும் பாதிக்கப்படும் என்பதில் ஐயமில்லை. யாழ். மேற்கு. யாழ்.கிழக்கு ஆகிய இரண்டு உதவி ஆணையாளர் பிரிவிலும் ஆயிரத்திற்கு மேற்

(4-ம் பக்கம் பார்க்க)

## போராட்டக்களத்தில் இறங்குகிறார் ம. பொ. சி.

**தமிழ் நாட்டுக்கு'சுயாட்சி கோரி போராட்டக் களத்தில் இறங்கப் போகிறார் தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சி.**

இத்தகவலை அவரே அண்மையில் அறிவித்துள்ளார். போராட்டத் திட்டங்கள் யாவும் அடுத்த மாதம் முதல் வாரத்தில் நடைபெறவிருக்கும் தமிழரசுக் கழக மாநாட்டில் வகுக்கப்பட இருக்கிறது.

தமிழ் நாட்டில் தோன்றியுள்ள மொழிச் சிக்கலுக்கு தீர்வு காண ஒரே வழி, மத்தியில் குவிந்துள்ள அதிகாரத்தைக் குறைத்து அவற்றை மாநிலங்களுக்கு பகிர்ந்தளிப்பதன் மூலம் 'சுயாட்சி' அளிப்பதே என்று தமிழரசுக் கழகம் கருதுகிறது. இக்கோரிக்கையை முன்வைத்துத் தான் தமிழரசுக் கழகம் நேரடி நடவடிக்கையில் ஈடுபட இருக்கிறது.

இந்த நடவடிக்கைகளால் தமிழக அரசுக்கு சிரமம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது என்று ம. பொ. சி. தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சந்திரன்,
ஏழாலை தெற்கு.

கே: என்னுடைய காதலி என்னைக் கண்டவுடன் தலை குனிகின்ருள். ஒன்றும் பேசாமல் இடையிடையே கடைக் கண்ணுல் பார்த்து புன் சிரிப்பு சிரிக்கின்ருள். இதைப்பற்றித் தங்கள் கருத்தென்ன?

ப: நீர் கொடுத்த அன்புச் சின்னம் உமது காதலியின் வயிற்றில் வளர ஆரம்பித்து விட்டது. அதைச் சொல்வதற்கு தான் அவ்வளவு கூச்சப்படுகிருள்!

ஃ

மு. கருணநிதி,
ஏழாலை மேற்கு

கே: எல்லாம் சிவன் செயல் என்று சொல்லி சும்மா இருப்பவர்களைப் பற்றி தங்கள் கருத்தென்ன?

ப: அப்படிப்பட்டவர்கள் புத்திசாலிகள்—வீணுக தங்கள் மனத்தை அலட்டிக் கொள்ளாமலிருப்பதால்!

கே: உங்கள் சிரிப்பு எதைக் குறிக்கிறது?

ப: உங்கள் மகிழ்ச்சியின் எதிரொலியை!

கே: மாணவர்கள் இக்காலத் தமிழ் சினிமா பார்ப்பதால் நன்மையா தீமையா?

ப: நன்மைதான்- மாணவர்க்கல்ல, படத்தயாரிப்பாளர்களுக்கும் வினியோகஸ்தர்களுக்கும்.

கே: புதுவருடத்தை முன்னிட்டு என்னைப்பற்றி சிறிது கூறுங்கள்.

ப: நீங்கள் சிக்கன இயக்கத்தை கடைப் பிடிப்பதில் வல்லவர். இல்லாவிட்டால் ஒரு தடவையில் 10 சத ஸ்டாம்புடன் 21 கேள்விகளை அனுப்பியிருப்பீர்களா?

ஃ

ஜெ. சின்னத்தம்பி,
கொழும்பு-13.

கே: வாழ்க்கையில் முன்னேற வேண்டுமாயின் ஒருவன் என்ன செய்ய வேண்டும்?

ப: எதுவும் தெரியாவிட்டாலும், எல்லாம் தெரிந்தவனைப் போல நடிக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

கே: படித்தவர்களை விட பாடசாலையைக் கண்டு அறியாதவர்கள் நல்ல நிலையில் இருப்பது எப்படி?

ப; படிப்பது வேறு; வாழ்க்கையில் வெற்றியடைவது வேறு; படித்தவர்கள் எல்லாம் வாழ்க்கையில் வெற்றியடைவதில்லை.

கே: உலகத்தில் தற்போது மக்கள் முதன் முதல் எதில் அக்கறையுள்ளவராக இருக்கிருர்கள்?

ப: உற்பத்தியைப்பெருக்குவதில்-உணவுற்பத்தியல்ல குழந்தையுற்பத்தியை.

ஃ

வாசுகி,
மன்னிங்பட்டினம்,

கே: பிரச்சினைக் குரிய கச்சாய்தீவை இரு அரசாங்கங்களும் தங்கள் உரிமையென கூறுகின்றன. ஆனல் இத்தீவு எந்த அரசாங்கத்தின் ஆட்சிக்கும் உட்பட்டதல்ல எனக்கொள்வது சரிதானே?

ப: எந்த ஆட்சிக்கும் உட்பட்டிருக்காத காரணத்தினுல்தானே இரு நாடுகளும் உரிமை கேட்கின்றன?

ஃ

ஜோ. இராஜன்,
திருகோணமலை.

கே: தோழியர் புடைசூழ வீதியில் செல்லும் கல்லூரி கோதையர் காளையரைக் கண்டதும் காரணமின்றி சிரிப்பதேன்?

ப: இந்தக் காளையரெல்லாம் எங்கள் கட்டைக் கவுணுக்குள் அடங்குபவர்கள் தானே என்று எண்ணும் போது காரணமில்லாத சிரிப்பு கன்னியர்க்கு ஏற்படுவதில் வியப்பென்ன?

ஃ

பி. யோகானந்த்,
உடுப்பிட்டி.

கே: தமிழ் மக்கள் இருக்கும் இன்றைய நிலையில் தனிப் பெரும் தலைவருக்கு வட்டமேசை மகாநாடு அவசியந்தானு?

ப: அவரே மறந்திருக்கும்போது அதை ஏன் ஞாபகமூட்டுகிறீர்கள்?

ஃ

அ. அன்ரனிகிறிஸ்ரி,
யாழ்ப்பாணம்.

கே: தி. மு. க. கட்சியின் கொள்கை என்ன குயுக்தியாரே?

ப: இந்தியயூனியனுக்குட்பட்ட ஓர் திராவிட சமஷ்டிக் குடியரசை நிறுவுதல்.

ஃ

பிறை சூடிய பித்தன்,
பதுளை.

கே: இலங்கை வாழ் இந்தியத் தமிழ் மக்களுக்கு வாழ ஸ்திரமான வழி சமைத்துக் கொடுக்காமல் இருக்கும் போது அவர்கள் எவ்வாறு இந் நாட்டுப் பிரசைகளாக முன்வர முடியும்?

ப; இந்நாட்டுப் பிரசைகளாகிவிட்ட பின்னர் அவ்வசதிகளை அவர்களுக்கு மறுக்க யாராலும் முடியாது.

ஃ

கிருஷ்ணர்,
பதுளை.

கே: பதுளையில் யாழ் அகற்றுச் சங்கம் என ஒரு சங்கம் இருப்பதை தமிழரசுக் கட்சி அறியுமா? அப்படி அறிந்திருப்பின் எதற்காக மலைநாட்டு தமிழர்களின் உரிமைக்காக போராட வேண்டும்.

ப: தமிழ் பேசும் மக்களுக்கிடையேயுள்ள பிளவும் பேதமும் அகற்றப்பட்டு ஒரே தேசிய இனமாக தமிழினம் ஐக்கியப் படவேண்டும். இந்த இலட்சியத்துக்காகப் போராடும் தமிழரசுக் கட்சிக்குயாழ் அகற்று சங்கம் ஒரு தூசு. ஏற்கெனவே வவுனியாவிலிருந்து கிள்ளியெறியப்பட்ட யாழ் அகற்று சங்கம் பதுளையில் என்ன செய்து விடப் போகிறது?

ஃ

'சுதந்திரப் பிரியன்',
அச்சுவேலி.

கே: தமிழக மாணவர்களின் தனித் தமிழ் நாட்டுக் கோரிக்கை நியாயமானதா?

ப: வடவர்களின் இந்தித் திணிப்பிலிருந்து பிறந்ததே தனித் தமிழ் நாடு கிளர்ச்சி. எனவே இந்தித் திணிப்பு நியாயமானது தானு?

ஃ

ஐ. நடேசன்,
நெல்லியடி.

கே: ஒரு வீரனுக்கு பலர் அடித்தால் அவன் கோழையா?

ப: அடிபட்டவன் அல்ல; அடித்தவர்களே கோழைகள்.


திருவாளர்
**குயுக்தியார்**
மே/பா சுதந்திரன்
194, ஏ பண்டாரநாயக்கா வீதி,
கொழும்பு-12

## வினு! -புவன்-

சொல்லுக் குறுதி வள்ளுவன் வாக்கு
சுருதி மீட்டும் நாலடி யாரின்
வல்லமை மிக்க எண்ணக் குவியல்
வன்மையைக் கூட்டும் புறநானூறு
இல்லற வாழ்வின் இன்பம் காட்டும்
இன்தமிழ்ப் பொக்கிஷம் அகநானூறு
எல்லாம் எம்மிடம் இருந்தும் பயனை
இதுவரை கண்டு அனுபவித் தோமா?


பஞ்சமா பாதகம் எவையெனக் கண்டு
பாருக் குரைத்த பழம்பெரும் மக்கள்
நெஞ்சில் இன்று துன்பமும் துயரும்
நிறைந்து வழிந்து உறைந்து திரண்டு
துஞ்சும் நிலையில் துடிக்கும் போதும்
துட்டரென்பவர் துயர் புரிவோர்கள்
கொஞ்சமாவது திருந்தி நடக்கக்
கூடி இணைந்து குடிவளர்த்தோமா?

காமப் பாலைக் கடைசியில் வைத்துக்
கருத்துடனுய்ந்து கடைந்த வள்ளுவர்
நாமம் கூறவே கூசிடும் நாரியர்
நம்மவரீன்ற நாளையத் தாய்மார்
சாமம் மறந்தும் சஞ்சரிக் கின்ற
சாக்கடை நிலமைகள் - சஞ்சலம் தூண்ட
நாமோ...இன்றும் வாழுகின்ருேமே
நாளைய உலகை நாம் மறந்தோமா??




# உடனே நடைபெற வேண்டிய இரண்டு தமிழ்ப் பணிகள்

**தில்லிப் பல்கலைக் கழகத்தில் தமிழ் பணியாற்றும் திரு. சாலை இளந்திரையனும், திருமதி சாலினி இளந்திரையனும் பின்வரும் வேண்டுகோளை தமிழ் அன்பர்களுக்கு விடுத்துள்ளனர்.**



சாலை இளந்திரையன்

நமது தாய்மொழியைப் பாட மொழியாகவும், நீதி மன்ற மொழியாகவும் ஆக்கும் பணியில் தீவிரமாக முனைந்துள்ளோம். ''எல்லாவற்றையும் தமிழில் கொண்டுவர முடியுமா, தமிழால் தர முடியுமா?'' என்னும் அய்யங்கள் ஒரு பக்கம் எழுந்து கொண்டு இருக்கின்றன. இந்த அய்யங்களை நமது ஆர்வமிக்க பேச்சுக்களால் மட்டுமே நீக்கிவிட முடியாது. பல துறைகளிலும் புதுப் புதிய தமிழ் நூல்கள் உருவாக வேண்டும்; அவை, கூடிய வரையில் பிற மொழிகளின் துணை இன்றியே அமைய முடியும் என்பதையும் நாம் மெய்ப்பிக்க வேண்டும்.

தவிரவும், தமிழில் உருவாகும் புதிய துறை நூல்கள் தமிழில் உள்ள சொற்களையும் [illegible] கொண்டிருந்தால் தான் தமிழர்கள் அவற்றை எளிதாகப் புரிந்து உள்வாங்கிக் கொள்ளுவார்கள். ஆதலால், முடிந்தவரை தமிழில் ஏற்கனவே உள்ள சொற்களையும் புதிதாக ஆக்கும் தமிழ் சொற்களையுமே இத்துறைகளில் மிகுதியாகப் பயன்படுத்த வேண்டும்; தவிர்க்க முடியாத இடங்களில் மட்டுமே பிறமொழிச் சொற்களைக் கடன்பெற வேண்டும்.

இதற்குத் துணையாக, உடனடியாக இரண்டு பணிகள் நடந்தாக வேண்டும்; (1) தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வழக்கில் உள்ள தொழில் துறை, கலைத்துறைப் பழகு தமிழ்ச் சொற்களைத் திரட்டித் தொகுத்து வகைப்படுத்த வேண்டும்; (2) தொல்காப்பியம் தொடங்கி நேற்று வரை வெளிவந்துள்ள எல்லாத் தமிழ் நூல்களுக்கும் சொல் அகராதியும் சொல் அடைவும் தயாரிக்க வேண்டும்.

இந்த இரண்டு பணிகளும் நிறைவேறினுல், நமக்குத் தெரியாத எவ்வளவோ சொற்கள் (புதிய துறைகளுக்குப் பயன்படக் கூடிய சொற்கள்) தமிழிலேயே இருப்பதை அறிவோம்; தேவையான புதிய தமிழ்ச் சொற்களை ஆக்கும் புதுப் புதிய வழிமுறைகளையும் அறிய வருவோம்.

நமது தமிழ்மொழி பல துறைகளிலும் செழிப்புற்ற மொழியாக வளர வேண்டிய இச் சமயத்தில், இவ்விரண்டு பணிகளும் மிக முக்கியம் என்பதை ஏற்கும் அன்பர்கள், நமிழக அரசையும் தக்க அறிஞர்களையும் இப்பணியில் ஈடுபடுமாறு தூண்டுவார்கள் என்று நம்புகிருேம். அவ்வாறு செய்ய வேண்டுமென்று அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்ளுகிருேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## கலாசார அமைச்சின் கவனத்துக்கு

எந்தவொரு நாட்டு மக்களினதும் பண்பாடு, பழக்க வழக்கம், விருப்பு வெறுப்புக்கள் ஆசாபாசங்கள் முதலியவற்றை அந்நாட்டிலிருந்து வெளிவரும் நல்லதரமான புதினப் பத்திரிகைகளைக் கொண்டு எடைபோட்டுவிட முடியும். மக்களின் உணர்ச்சிகளையும் ஆசாபாசங்களையும் எடுத்துக் காட்டும் கண்ணாடியாக நல்ல ஏடுகள் மிளிர வேண்டும்.

அத்துடன், புதினப் பத்திரிகைகளின் பணி முடிந்துவிடவில்லை. மக்களைத் தவறான பாதையில் இருந்து திருப்பி நல்ல வழியில் நடத்தி ஒழுக்கமும் உயர் பண்பும் உள்ள சமூகத்தினராக அவர்களைச் சிருஷ்டிக்க வேண்டும்.

இவை பத்திரிகைகளின் மிக முக்கியமான கடமையாகும். மக்களின் வாழ்வுடன் புதினப் பத்திரிகைகள் இரண்டறக் கலந்துவிட்ட இன்றைய உலகில் இந்தப் பொறுப்பிலிருந்து தரம் வாய்ந்த எந்த நல்ல பத்திரிகையும் ஒதுங்கிவிட முடியாது.

இந்தக் கடமையை ஆற்றுவதில் இலங்கையிலிருந்து வெளிவரும் தினசரிகள் முன்னணியில் நிற்கின்றனவா என்றால், "ஆம்" என்று நெஞ்சு நிமிர்த்திப் பெருமையுடன் சொல்லமுடியாத நிலையில் இன்று இருக்கிறோம்.

பிறருக்கு நன்மை செய்யப் பிறந்த நீ நன்மை செய்ய முடியாவிட்டாலும் தீமையாவது செய்யாதிரு என்பது விவேகானந்தர் வாக்கு.

ஈழத்துத் தினசரிகள் இலங்கை மக்களை நல்ல வழியில் அழைத்துச் செல்லாவிட்டாலும் பரவாயில்லை. ஆனால் மக்களைக் கெடுத்து, எதிர்கால சந்ததிகளின் பிஞ்சு உள்ளங்களிலே நஞ்சை விதைத்து, பண்பாடு ஒழுக்கம் முதலியவற்றை சிதைக்கும் திருப்பணியில் ஈடுபட்டிருப்பதை எத்தனை நாட்கள் தான் பொறுத்துக் கொண்டிருக்க முடியும்?

கற்பழிப்பு, கொலை, கொள்ளை போன்ற செய்திகளையும், ஆண் பெண் உடலுறவு பற்றிய செய்திகளையும் சுவைபட எடுத்துக் கூறுவதில் தான் தினசரிகள் ஒன்றுடன் ஒன்று போட்டியிடுகின்றன. போதாக் குறைக்கு, ஒவ்வொரு நாளும், கவர்ச்சிப்படம் என்ற போர்வையில் வெளிநாட்டு உள்நாட்டு நடிகைகளின் தொடையும் மார்பும் தெரியும் படங்களை முன்பக்கத்தில் வெளியிடவும் தவறுவதில்லை.

இந்தப் 'பணியில்' அண்மையில் முளைத்த காளான் பத்திரிகைகள் தான் இறங்கியுள்ளன வென்றால் இந்த நாட்டின் மூத்த பத்திரிகைகள் கூட அந்தத் தரத்துக்கு இறங்க வேண்டியேற்பட்டுள்ளதைக் கண்டு கழிவிரக்கப்படுகிறோம்.

ஆபாசச் செய்திகளை நமது பத்திரிகைகள் வெளியிடுவதன் ஒரே நோக்கம் எப்படியாவது விற்பனையைப் பெருக்கி பணம் சம்பாதிக்க வேண்டும் என்பதுதான். மக்களிடத்தில் உறங்கிக் கிடக்கும் விகார உணர்ச்சிகளைத் தட்டியெழுப்பி அதன் மூலம் தங்கள் கஜானாக்களை நிரப்பிக்கொள்கின்றன பத்திரிகை நிறுவனங்கள்.

நமது நாட்டில் குற்றங்கள் அதுவும்—பெண் சம்பந்தப்பட்ட குற்றங்கள் மலிந்துள்ளன என்றால் அதற்குள்ள பொறுப்பில் பெரும் பகுதியை நமது பத்திரிகைகளே ஏற்கவேண்டும். தங்கள் சொந்த லாபத்திற்காக, நாட்டு மக்களின் பண்பாட்டைக் கெடுத்து ஒழுக்கத்தைக் குட்டிச்சுவராக்கி, குற்றம் புரியும் ஓர் சமூகத்தை சிருஷ்டிப்பது மாபெரும் பாவம் மட்டுமல்ல; தேசத் துரோகமான நடவடிக்கையுமாகும்.

எப்படியும் பணமுழைப்பதுதான் தினசரி பத்திரிகை நிறுவனங்களின் நோக்கமென்றால் அதே நோக்கத்துக்காக கள்ளக் கடத்தல் செய்பவர்களையும் சுற்றுமாற்றுப் பேர்வழிகளையும் கண்டித்தெழுத இந்தப் பத்திரிகைகளுக்கு என்ன யோக்கியதையிருக்கிறது?

நல்ல ஒழுக்கமுள்ளவர்களாக பிரஜைகளை வளர்ப்பது அரசாங்கத்தின் இன்றியமையாக் கடமை. இந்தப் பிரச்சினையில் தலையிட்டு, மக்களின் பண்பாட்டையும் ஒழுக்கத்தையும் காப்பாற்ற வேண்டிய பெரும்பொறுப்பிலிருந்து கலாசார அமைச்சு இனியும்விலகியிருக்கக் கூடாது.

வெளிநாட்டிலிருந்து வரும் ஆபாசப்பத்திரிகைகளையும், சினிமாப்படங்களையும் தடைசெய்தால் மட்டும் போதாது; உள்ளூர் பத்திரிகைகளும், ஆபாசச் செய்திகளை வெளியிடுவதன் மூலம்மக்களை நாசவழியிலிட்டு செல்வதிலிருந்து தடுத்து நிறுத்தவும் ஏதாவது நடவடிக்கையெடுத்தாக வேண்டும்.

இது அவசரமும் அவசியமுமானது. அன்றி இதே நிலை நீடித்தால், நமது பண்பாடும், ஒழுக்கமும் பழங்கதையாகிவிடும்!

# புதிய ஊழியர்களின் எதிர்காலம் அரசு என்ன செய்யப் போகிறது?

1956-ம் ஆண்டுக்கும், 1965-ம் ஆண்டுக்குமிடையில் அரசாங்க சேவையில் சேர்ந்த "புதிய ஊழியர்கள்' இன்று மிகப் பெரிய கேள்விக் குறியுடன் அரசாங்கத்தின் நல்லெண்ணத்தை எதிர்பார்த்து நிற்கின்றனர். அவர்கள் உத்தியோக மொழியைப் பயில்வதற்கு தேசிய அரசாங்கம் அளித்த காலக்கெடு ஜுலை 31-ந் திகதியுடன் முடிவடைவதால், குறித்த கெடுவுக்குள் உத்தியோக மொழிப் பரீட்சையில் சித்தியடையாத 'புதிய ஊழியர்கள்' தங்கள் எதிர்காலம் என்ன ஆகுமோ, தங்கள் தலைவிதியை அரசாங்கம் எப்படி நிர்ணயிக்கப் போகிறதோ என்ற ஏக்கப் பெருமூச்சுடன் காத்திருக்கிறார்கள்.

புதிய ஊழியர்கள் உத்தியோக மொழியைக் கற்றுக் கொள்வோம் என்று உறுதிமொழிப் பத்திரத்தில் கையெழுத்திட்டு அரசாங்க சேவையில் சேர்ந்தவர்கள். எனவே அவர்கள் உத்தியோக மொழியைப் படித்துத்தானாக வேண்டும் என்று அரசாங்கம் வாதிடுவது தர்க்க ரீதியில் சரிபோல தோன்றினாலும், யதார்த்த ரீதியில் நோக்குமிடத்து இன்னொரு மிகப் பெரிய உண்மையையும் நாம் சிந்திக்க வேண்டும்.

### ஓர் உண்மை

'புதிய ஊழியர்கள்' உத்தியோக மொழியை கற்றுக்கொள்ள வேண்டும் என்று நிர்ப்பந்தத்தால் வேறு வழியின்றி, அதற்கு ஒப்புக்கொண்டவர்களே தவிர தாமே விரும்பியல்ல என்ற உண்மையை மறந்துவிடக் கூடாது.

எப்படியிருந்த போதிலும், புதிய ஊழியர்கள் ஒப்புக்கொண்டபடி உத்தியோக மொழியை கற்றுத்தானாக வேண்டும் என்ற அரசாங்கத்தின் கருத்துக்கு நாம் மாறுபட்டு நிற்கவில்லை.

ஆனால் உத்தியோக மொழியைக் கற்றுக் கொள்ளாத காரணத்தால், புதிய அரசாங்க ஊழியர்களின் சம்பள உயர்வை நிறுத்தி வைத்து அவர்களின் வயிற்றிலடிப்பது மனிதாபிமானமற்ற, ஈவிரக்கமற்ற கொடுமையான செயல் என்பதை ஆணித்தரமாகச் சுட்டிக் காட்டுகிறோம்.

அதுவும், சிறுபான்மை மக்களின் ஆதரவு பெற்றதாக கூறப்படும் தேசிய அரசாங்கமும் முன்னைய வகுப்புவாத அரசாங்கங்களைப் பின் பற்றி இப் பிரச்சினையில் நடந்து கொள்வது எமக்கு ஆழ்ந்த கவலையை ஏற்படுத்துகிறது.

### வயிற்றிலடிப்பதா?

விலைவாசிகள் உணர்ந்து, ரூபா நாணய மதிப்பும் குறைக்கப்பட்டு வாழ்க்கைச் செலவுக்கு போதிய வருவாயின்றி மக்கள் வாடும் போது, மொழி பயிலாத காரணத்துக்காக ஒரு குறிப்பிட்ட தொகையினரின் வயிற்றிலடிப்பது ஒரு நாணயமான அரசின் செயலல்ல.

இன்னுமொன்றையும் அரசாங்கத்தின் கவனத்துக்கு கொண்டுவருகிறோம். நாட்டின் உத்தியோக மொழிச் சட்டம் ஒன்றல்ல; இரண்டு சட்டங்கள் உண்டு. ஒன்று 1956-ம் ஆண்டின் சிங்களம் மட்டும் சட்டம். மற்றையது, 1958-ம் ஆண்டின் தமிழ் மொழி விசேட விதிகள் சட்டம்.

எனவே உத்தியோக மொழிகள் என்னும் போது, சிங்களம், தமிழ் இரண்டுமே அதற்குள் அடங்குகின்றன. ஆனால் இந்நாட்டின் ஓர் உத்தியோக மொழியாகிய சிங்களத்தையே புதிய அரசாங்க ஊழியர்கள் படிக்க வேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்படுகிறது. அப்படிப் படியாதவர்களுக்கு சம்பள உயர்வும் நிறுத்தப்படுகிறது.

சுதந்திரன் அரசியல் விமர்சகர்

### பாரபட்சமேன்?

ஆனால் மற்றொரு உத்தியோக மொழியாகிய தமிழ் மொழியைப் பயில்வதற்கு எவ்வித கட்டுப்பாடும் விதிக்கப்படவில்லை. தமிழ் மொழியைப் பயிலாதவர்களுக்கு சம்பள உயர்வு நிறுத்தி வைக்கப்படவுமில்லை. இரண்டு மொழிச் சட்டங்களையும் அமுல் நடத்தும் போது ஏன் இந்தப் பாரபட்சம் காட்டப்படுகிறதென்று கேட்க விரும்புகிறோம்.

ஆகவே •புதிய ஊழியர்கள் உத்தியோக மொழியைப் பயில்வதற்குரிய காலக்கெடுவை முடிந்தால் கால வரம்பின்றி அன்றேல் 10 ஆண்டுகளுக்காவது ஒத்திவைப்பதுடன் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சம்பள உயர்வையும் அவர்களுக்கு வழங்க துணிந்து தேசிய அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

எதிர்க் கட்சியைப் பற்றி அரசாங்கம் அஞ்சத் தேவையில்லை. ஏனெனில் எதிர்க் கட்சியினரும் இன்று சிறுபான்மையினருக்காகக் கண்ணீர் வடிக்கின்றனர்.

சிறுபான்மை மக்களின் துயர் துடைக்கும் துணிச்சலான நடவடிக்கையை அரசாங்கம் எடுக்கும் போது, அதை எதிர்க்கட்சியினர் எதிர்த்தால், அவர்கள் சிறுபான்மை மக்களுக்காக வடிக்கும் கண்ணீர் முதலைக் கண்ணீர் என்பதையும் சிறுபான்மைமக்கள் தீர்க்கமாக அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படும்.

# தொண்டைமான் போடும் இரட்டை வேடம்!

தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணாவை இ. தொ. காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். தொண்டமான் ஓர் அமெரிக்க உளவுப்படை ஏஜண்டு என்று வர்ணித்ததாக கூறப்படும் ஓர் செய்தி 1968 சனவரி மூன்றாவது வார சுதந்திரனில் முன்பக்க முகப்புச் செய்தியாக வெளி வந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

குறித்த செய்தி ஓர் நம்பிக்கையான வட்டாரத்திலிருந்து கிடைத்தபோது, அச்செய்தியை நாம் மிகுந்த மனவருத்தத்துடனும், ஆத்திரத்துடனும் வெளியிட்டோம்.

### வெளியிட்டது ஏன்?

உலகெங்கும் வாழும் 4 கோடித் தமிழர்களாலும் போற்றப்படும் ஒப்பற்ற தமிழ் தலைவரான அண்ணாவின் கண்ணியத்துக்கு இழுக்கு ஏற்படுத்தும் குறிப்பொன்றை ஓர் ஈழத்தவர்—அதுவும் தமிழர் ஒருவர் வெளியிட்டதாக கூறப்பட்டது நமக்கே அவமானமாக இருந்தது.

குறித்த செய்தியை வெளியிட்ட போது, அச்செய்தி உண்மையாயிருக்கக் கூடாது என்ற ஓர் ஆவலுடன் வெளியிட்டோம. கிடைத்த செய்தியை, அதுவும் முக்கியமான ஓர் செய்தியை தமிழ் மக்களிடமிருந்து மறைப்பதை சுதந்திரன் விரும்பவில்லை.

ஆனால் குறித்த செய்திக்கு, திரு. தொண்டமானிடமிருந்து எதுவித மறுப்பும் கிடைக்கவில்லை. கிடைத்திருந்தால், பூரிப்புடன் அதை வெளியிட்டிருப்போம். ஆனால் இன்றுவரை திரு. தொண்டமானிடமிருந்து எவ்வித மறுப்புச் செய்தியும் கிடைத்திடவில்லை.

### காஞ்சிக்கு மறுப்பு

இதற்கிடையில் சுதந்திரனில் வெளிவந்த குறித்த செய்தியையொட்டி ஓர் குறிப்பை தமிழகத்திலிருந்து வெளிவரும் தி. மு. க. ஏடான 'காஞ்சி' அதன் 25.2.68 இதழில் பிரசுரித்திருந்தது. 'காஞ்சியின்' குறிப்பும் சுதந்திரன் 28. 3. 68 இதழில் இடம் பெற்றிருந்தது.

'காஞ்சி' இதழ் கொடுத்த சூடு தாங்க முடியாமல்— தி. மு. க வட்டாரத்தில் தமக்கு இருக்கும் செல்வாக்கு (அப்படி இருந்தால்) மங்கி விடுமே என்ற அச்சத்தால், சுதந்திரன் செய்தி 'அப்பட்டமான பொய்' என்றுகாஞ்சிக்குமறுப்பு எழுயிருக்கிறார் இ. தொ. கா. பிரமுகர் ஒருவர். அதையும் திரு. தொண்டமான் நேரடியாக மறுக்கவில்லையென்பது குறிப்பிடத் தக்கது. 'தொழிலாளர் கல்வி இயக்குனர் திரு. ச. செல்லையா என்பவர் மறுத்திருக்கிறார்.

### ஓரே ஒரு கேள்வி

இ. தொ.கா. தலைமைக்கு ஒரேயொரு கேள்வி கேட்கிறோம்- இலங்கைப் பத்திரிகையொன்றில் வெளி வந்த செய்தி தவறென்றால் ஏன்

(7-ம் பக்கம் பார்க்க)

### உங்கள் கருத்தை எழுதுங்கள்

இவ்வார "எண்ணத்தில்" வெளியிடப்பட்டிருக்கும் கருத்துக்கள் பற்றி வாசகர்களாகிய உங்கள் கருத்தை சுருக்கமாக எழுதியனுப்புங்கள். தகுந்தவை பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூலோகத்தின் மரண வாக்குமூலம்

எமது சிறுகதை

**“மட்டுவிலான்”**

பூனைபோல மெதுவாக வந்து அடுப்படியுள் எட்டிப் பார்த்தான் வேலாயுதம். குனிந்து அடுப்பூதிக் கொண்டிருந்த அன்னம்மாவின் சிவந்த முகம் தீச்சுவாலையின் ஒளியில் மேலும் சிவந்து செந்தணலாக ஜொலித்தது. மற்றும் சமயமாக இருந்தால் இப்படிப் பார்த்துக் கொண்டிருப்பானா? போய்ப் பக்கத்திலே குந்தி விடுவான். அவள் கஞ்சியை வடித்து—அதை நல்ல தடிப்பாக இருக்கும் சிரட்டையிலே வார்த்துதேங்காய்ச் சொட்டும் சேர்த்துக் கொடுப்பாள். முதலில் அவள் தான் உறிஞ்ச வேண்டும். இல்லாவிட்டால் அவன் குடிக்கமாட்டான். அவள் இதழ் தோய்ந்த பானமல்லவா? அதன் முன்னால் அமிழ்தும் எம்மாத்திரம். அவன் சுவைத்துச் சுவைத்து உறிஞ்சுவான்.

இன்றுஅவளை ஏறெடுத்துப் பார்க்கவே அவனுக்குத் திகிலாக இருந்தது. அப்போதே மாசிப்பனி தனது குணம் காட்ட ஆரம்பித்து விட்டாலும் அவனுக்கு வேர்த்துக் கொட்டியது. காலை தொடக்கம் மண் வெட்டி வேலை செய்தும் கூட உடல் அவ்வளவாக உளையவில்லை.

ஆனால் மனம்?—

ஒரே உளைச்சலாக உளைந்தது.

சற்று முன்னதாக அவன் வந்து கொண்டிருந்தபோது அவனை நோக்கி நீண்ட விரல்கள் எத்தனை?

‘உவன்தானும்’— ஒருத்தியின்குரல்.

அவன் காதிலே நாராசத்தைத்தான் காய்ச்சி ஊற்றியதோ:

,உவன்தானும்...உவன்தானும்...உவன்தானும்’ அவளதுகுரல் அவன் காதிலே திரும்பத் திரும்ப ஒலித்துக்கொண்டிருந்தது,

அவனை நோக்கிப் பாய்ந்து வந்த சொல்லம்புகள்

அப்பப்பா...‘ ஆளைப்பாரன் பூனை மாதிரி... ஆனல், —இன்னெருத்தியின் குரல் இவ்வளவிலேயே நின்று விட்டது.

இவ்வளவு நாட்களும் முறுவல் காட்டிய முகங்கள், கனிவு ததும்பிய கண்களுக்கு அன்றென்ன வந்து விட்டது. அவனை ஏறெடுத்துப் பார்த்த கண்களெள்லாம் கனல்கக்கின. சிவபிரானின் நெற்றிக் கண்ணிலேற் பட்ட கனல் கூட நக்கீரனை இவ்வளவு தூரம் தகித்திருக்குமோ தெரியாது. அவன் அவ்வளவு தூரம் துவண்டு போய் விட்டான்.

அன்னம்மாவிற்கும் செய்தி எட்டியிருக்குமோ. அவள் இன்னும் வேலாயுதத்தைக் காணவில்லை. கூப்பிடலாம் என்று பார்த்தான். நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக்கொண்டது: அப்படியே எங்காவது ஓடிவிடலாமா என்று கூட அவனுக்குத் தோன்றியது. முடியவில்லை. அப்படியே சோர்ந்து விழுந்தவன் தாடையிலே கைகளை முட்டுக் கொடுத்தபடி குந்திக் கொண்டுவிட்டான். அன்னம்மா இன்னும் திரும்பிப்பார்க்கவில்லை. அவள் பம்பரமாக இயங்கிக் கொண்டிருந்தாள்.

வேலையில் ஈடுபட்டிருந்த போதே அவனுக்குப் பூலோகத்தின் மரண வாக்குமூலத்தைப் பற்றிய செய்தி எட்டி விட்டது. அவள் செத்து இரண்டு மணித்தியாலங்கள் கூட ஆகவில்லை. அதற்குள்ளாகவே காட்டுத்தீபோலச் செய்தி எங்கும் பரவிவிட்டது:

அன்னம்மாவிற்கும் செய்தி எட்டியிருக்குமோ.

அவளைக் கூர்ந்து கவனித்தான், வேலாயுதம். அவளிடத்து எந்தவிதமாற்றமும் இல்லை. பூலோகத்தின் மரண வாக்கு மூலம் அவளது செவிகளை மட்டும் எட்டியிருந்தால்...

...இப்போது அவள் பத்திரகாளியாக அல்லவா நின்று கொண்டிருப்பாள். ஒரு வேளை அவனை இரண்டு துண்டாக வெட்டிப் போட்டிருந்தாலும் போட்டிருப்பாள்.

அன்னம்மா பலகை ஒன்றைஎடுத்து அடுப்பருகே போட்டுவிட்டுக் கஞ்சி வடிக்க ஆரம்பித்தாள். பானையை மெதுவாகச் சரித்து அகப்பையைப் பானையின் வாயிலே கொடுத்து அவள் கஞ்சியை வடித்துக் கொண்டிருந்தாள். கஞ்சி சள சளவென்று கீழேயுள்ள சட்டிக்குள் வடிந்து கொண்டிருந்தது.

அன்னம்மா மட்டும் அதைக் கேள்வியுற்றிருந்தால்...

...வேலாயுதத்தின் மனம் முன்பு நடந்த ஒரு சம்பவத்தை அசை போட்டது.

வயலிலே அருவி வெட்டு நடந்தகொண்டிருந்த சமயமது. ஆண்களும் பெண்களுமாக அருவி வெட்டிக் கொண்டிருந்தார்கள். வேலாயுதத்திடமிருந்த வெற்றிலைச் சரையில் வெற்றிலை முடிந்துவிட்டது. அவன் பக்கத்தில் நின்ற ஒரு பெண்ணின் உதவியை நாடினான்.

‘இஞ்சாய் உண்ணாணை ஒரு கிள்ளு வெத்திலை தாவன்.’ பக்கத்தில் நின்றவள் ஒரு வாய்த் துடுக்குக் காரி. அவள் கேலியாகச் சொன்னாள், ‘இஞ்சை வெத்திலை விக்கிறேலலை.’

அவன் ஒன்றும் பேசாது திடீரென அவளது மடியை அவிழ்த்துத் தனக்குத் தேவையானதை எடுத்துக் கொண்டான். இதை அவன் சற்றைக்கெல்லாம் மறந்து விட்டான்.

இதையெல்லாம் அன்னம்மாவின் கழுகுக் கண்கள் கவனித்ததையோ, அவள் மனதுக்குள் கறுவிக் கொண்டதையோ அவன் அறியான்.

மாலையில் வீடு திரும்பும் போது வயல் கழிந்து ஆட்களின் தலை மறைந்ததும் அவன் மெதுவாக அவளைத் தொட்டான்.

அவள் சீறிக் கொண்டே அவனைப் பிடித்துத் தள்ளி விட்டாள்.

வேலாயுதத்துக்கு ஒன்றுமே புரியவில்லை.

‘அன்னம்!...அன்னம்! என்று அழைத்த வாறே அவள்பின் ஓடினான்.

சிறிது நேரம் ஒன்றும் பேசாமல் நடந்தவள் திடீரென்று கேட்டாள்.

‘உனக்கு எத்தினை நாளாய் அவளோடை தொடுப்பு’

அவனை யாரோ திடீரெனக் கீழே தள்ளி மிதித்தாற்போலிருந்தது.

அவளுடைய உஷ்ணமான வார்த்தைகளிடையே அவன் விஷயத்தைக் கிரகித்துக்கொள்ள மிகுந்த சிரமப்பட்டான். அவளின் கோபத்துக்குக் காரணம் புரிய அவனுக்கு வெகு நேரம் பிடித்தது.

அவளைச் சமாதானப் படுத்த அவன் பட்டபாடு அப்பப்பா. அன்றிரவும் மறுநாட் காலையும் அவர்கள் வீட்டில் அடுப்புப் புகையவில்லை. அவர்களுடைய உள்ளங்கள் தாம் புகைந்தன.

அப்போதே அப்படிச் சீறியவள் காதில் இப்போ இந்த மரண வாக்கு மூலம் விழுந்திருந்தால்......

நினைக்கவே அவனுக்குப் பயமாக இருந்தது. அந்த நேரம் பார்த்தா பாழும் தும்மல் வரவேண்டும் அவனுக்கு.

கஞ்சி வடித்தபடியே ஒருக்களித்துத் திரும்பிப்பார்த்தவளின் கண்கள் மகிழ்ச்சியால் மலர்ந்தன.

அவளின் மலர்ச்சியான வதனம் சற்றுத் தெம்பை ஊட்டினாலும், இந்த ஆறுதல் தற்காலிகமானதுதான் என்ற நினைவு அவனை வதைத்தது.

எந்நேரம் அவளுக்குச் செய்தி எட்டுமோ...

...எந்நேரம் இடி இடிக்குமோ...

ஆவி பறக்கும் கஞ்சிக் கலயத்துடனும், ஒரு இரட்டையுடனும் மெதுவாக வந்து அவனருகே குந்தினாள் அன்னம்மா.

‘உனக்கென்ன இண்டைக்கு?’ மெதுவாக அவன் தலையை நிமிர்த்தினாள் அவள்.

வேர்த்துக் களைத்து வெளிறிப்போன முகத்துடன் நிலத்திலே கையை ஊன்றிய படி ஆயாசத்தோடு இருந்தான் வேலாயுதம். அவனுடைய கண்கள் பரிதாபகரமாக ஒரு முறை அவளை விழித்துப் பார்த்துவிட்டுக் கீழே தாழ்ந்தன.

அவனது அடி மனதில் அவளுக்கு என்னென்ன தெரியும் என்று அறிய வேண்டுமென்ற ஆவல் வேரூன்றியது. உந்தலின் வேகத்தை தவிர்க்க முடியாமல் மெதுவாக அவன் சொன்னான்—

‘பூலோகம் செத்துப் போனாளாம்’

வினாடிகள் ஊர்ந்தன. அன்னம்மா மௌனம் சாதித்தாள்.

அடுத்த வீட்டு நாயொன்றிடம் கடி வாங்கி விட்டு அப்போதுதான் வாள், வாள் என்று கத்திக் கொண்டு வந்த அவர்களது நாயை அவள் வைத்தகண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

தீர்ப்பு வாசிக்கும் நீதிபதியின் வாயையே பார்த்துக் கொண்டிருக்கும் குற்றவாளிபோல அவன் அவளது முகத்தையே உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தான்.

‘நான் எல்லாம் கேள்விப் பட்டன்’

திடீரென நிசப்தத்தைக் கிழித்தன அவளது வார்த்தைகள். ‘நீ உதுக்கேன் பேய் பிடிச்சவன் மாதிரி இருந்தனி’ இஞ்சாய் என்னைப் பார். இவளவை ஆர் என்னத்தையாலும் சொல்லட்டும் ... நிதானமாக வார்த்தைகள் வெளிவந்தன.

அவள் தான் அவன் மீது எத்துணை நம்பிக்கை வைத்திருந்தாள்.

‘வயசு முப்பத்தைந்தைக் கடந்த பிள்ளை ஒண்டு குமராய் இருக்கெண்ட நினைவில்லாமல் தேப்பன் கள்ளுக்கடை வழியை திரிஞ்சால் பிள்ளைக்கு என்ன நடக்கும்? அவன் பாவி...பரியாரி...பிள்ளையைக் கரைக்கிறதெண்டு தாயையும் எல்லே கரைச்சு விட்டான்’

வாய் சொற்களை உதிர்க்க கைமெதுவாக அகப்பையில் கஞ்சியைத் துளாவி சிரட்டையில் விட்டு மெதுவாக அவனிடம் நீட்டியது.

‘அவள்...அவள்...அவள்... அவளை நான் என்னண்டு சொல்ல, அவளுக்குச் சாகேக்கிள்ளை பழி சாட்டுறதுக்கு ஒருத்தரும் கிடைக்கேல்லையாமோ. ஒண்டும் தெரியாத நீதான் ஆப்புட்டியாக்கும்...அவள் கிடக்கட்டும். இந்தா நீ இதைக் குடி’

அவனது கரம் நீளத் தயங்கியது.

அவள் கஞ்சிச் சிரட்டையை மணலுட் புதைத்து விட்டு அவனருகே சென்று அமர்ந்தாள்.

‘சீ என்னப்பா நீ’—என்று அதட்டியவள் தனது முந்தானையை எடுத்து அவனது முகத்தை அழுத்தித்துடைத்தாள்.

அடுத்த கணம் தனது சக்தி எல்லாவற்றையும் திரட்டி அவனை முத்தமிட்டாள்.

அவள் தனது அன்பை என்றைக்குமே அவ்வளவு வெளிப்படையாகக் காட்டியதை அவன் கண்டதில்லை. வேலாயுதத்தின் கண்கள் கலங்கின. சிறிது நேரத்திற் கஞ்சிக் கலயம் காலியாயிற்று.

அன்றிரவு சலனமின்றி அமைதியாக உறங்கிக் கொண்டிருந்த அன்னத்தை உற்றுப் பார்த்த வண்ணம் ஏதோ முணுமுணுத்தபடி கிடந்தான் வேலாயுதம்.

மறுநாட்காலை:

வேலாயுதத்தின் பிணம் வீட்டின் பின் புறம் தொங்கிக் கொண்டிருக்கக் காணப்பட்டது. வேலாயுதத்தின் மீது அப்பழுக்குச் சொல்ல முடியாதென்றும், ஊர் அபவாதத்தைத் தாங்க முடியாமலேயே அவன் தற்கொலை செய்து கொண்டதாகவும் இன்றைக்கும் நம்பிக்கொண்டிருக்கிறாள் அன்னம்மா.

(யாவும் கற்பனை)

## யாழ். கூட்டுறவு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட சங்கங்கள் பரிபாலிக்கப்படுகின்றன. இந்த இரண்டு பிரிவுகள் இருந்தும் சங்கங்களின் தரங்கள், அபிவிருத்திகள் குன்றியிருக்கும் போது இவை இரண்டு பிரிவுகளையும் ஒரு பிரிவாக்குவதால் யாழ்ப்பாணப் பகுதியின் கூட்டுறவு அபிவிருத்தி மிகவும் பாதிக்கப்படும் என்பதில் சந்தேகமேயில்லை.

அவை மட்டுமல்ல இதனால் நிர்வாக ரீதியிலும், யாழ்ப்பாணப்பகுதிக்கு பல நட்டங்கள் ஏற்படக் கூடியதாக இருக்கின்றது.

இரண்டு பேரில் ஒரு (தமிழர்) உதவி ஆணையாளர் குறைக்கப்பட வேண்டும், தமிழ்க் குமாஸ்தாக்கள் குறைக்கப்படும், நிர்வாகச் சீர்கேடுகள் அதிகரிக்கும், கூட்டுறவு பரிசோதகர் குறையும் (தமிழர்கள்), பொது மக்களுக்கும், கூட்டுறவு அபிவிருத்திக்கும் உள்ள தொடர்புகள் குறைந்து விடும்.

எனவே, விரிவடைந்து வரும் யாழ்ப்பகுதி கூட்டுறவு அபிவிருத்தியை தடை செய்யாது இருக்க இத்திட்டத்தை நிறுத்தி வைக்க நர்வடிக்கை மேற்கொள்ளுவீட்கள் என்ற நம்பிக்கையுடன் இவ்விடயத்தை தங்கள் கவனத்திற்கு விடுகின்றோம். உடன் ஆவன செய்க.

## நீதிமன்றங்களி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

தமிழ் பகுதியிலுள்ள அவரது சீடகோடிகள் இதற்கு என்ன சாட்டு சொல்லப்போகிறார்கள் என்பதே தமிழ் மக்களின் இன்றைய கேள்வியாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணா ஆட்சியில் ஓராண்டு

தமிழகத்தில் தி. மு. க. ஆட்சியேற்பட்டுக் கடந்த மார்ச் 6-ந் திகதியுடன் ஓராண்டு பூர்த்தியாகிவிட்டது. தி. மு. க. ஆட்சியின் ஓராண்டு கால ஆட்சி பற்றி சில குறிப்புக்களை இங்கு தருகிறார் திரு, கே. எஸ். ராமானுஜம். திரு. ராமானுஜம், புது டெல்லி இந்துஸ்தான் டைம்ஸ் ஏட்டின் தென்னிந்தியப் பிரதிநிதியாவர்.

**கே. எஸ். ராமானுஜம்**

நிலையான அரசும், சிறந்த நிர்வாகமும், அமைதி நிறைந்த அரசியல் நிலையையும் கொண்டு விளங்கும் இந்திய மாநிலங்களில் தமிழ்நாடு இன்று முன்னணி வகிக்கின்றது. சுதந்திரத்துக்கு முன்னும் சரி பின்னும் சரி தமிழகத்தில் இன்றுள்ளது போன்ற ஓர் அரசாங்கம் அமைந்ததே இல்லை எனலாம்.

20ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சி திடீரென வெளியேற்றப்பட்டதும், அதேயளவு அதிர்ச்சியளிக்கும் விதத்தில் தி. மு. க. மிகப் பெரும்பான்மையுடன் ஆட்சிபீடமேற்றப்பட்டதும், எந்த வகையிலும், மாநிலத்தின் முன்னேற்றத்துக்கு நஷ்டத்தை ஏற்படுத்தவில்லை.

இதன் மூலம் இந்தியாவின் ஏனைய மாநிலங்களுக்கெல்லாம், சனநாயக தத்துவத்தை எடுத்து விளங்க வைத்திருக்கிறது தமிழகம்.

## தி. மு. க. வின் அதிர்ஷ்டம்

தி. மு. கழகத்துக்கு அதன் தலைவராக திரு. சி. என். அண்ணாதுரை வாய்த்திருப்பது அதிர்ஷ்டவசமாக அமைந்துளது. ஏனைய தி. மு. க. தலைவர்களைவிட, தி. மு, கழகத்தை வளர்த்தெடுத்து, ஒரு கொள்கை வழியிலே அதைச் செலுத்தி வந்தபெருமை திரு. அண்ணாவுக்கே உரியது. இதனால் கடந்த ஆண்டு மார்ச் தேர்தலில் தி. மு. க. வெற்றி பெற்று அமைச்சரவை அமைக்கும்படி கவர்னரால் கேட்டுக் கொள்ளப்பட்ட நேரத்தில் தி. மு. கழகத்துக்குள் முதலமைச்சர் பதவிக்காகப் போட்டியே ஏற்படவில்லை.

தமிழக மாநிலத்தின் ஆளுங்கட்சியாக கடந்த 12 மாதங்கள் தி. மு. க. பணியாற்றிய சமயத்தில், தங்கள் எதிர்கால நல்வாழ்வுக்கு வழி காட்டும் ஒரேயொரு ஒப்பற்ற தலைவர் என்று தமிழகத்தில் வாழும் மூன்று கோடி தமிழர்களாலும் மனமொப்ப பெருமையுடன் பேசிக்கொள்ளும் நிலையை திரு. அண்ணா சம்பாதித்துள்ளார். தமிழகத்திலும்சரி, இந்தியாவிலும் சரி அரசியல் பொது வாழ்வில் ஈடுபட்டிருப்போரில் மக்களின் பிரச்சினைகளை உணர்ந்த ஓர் தலைவராக அண்ணா விளங்குகிறார்.

தி. மு. க. ஆட்சியின் முதலாண்டு நிர்வாகத்தில் அண்ணா அமைச்சரவை சில காரியங்களையே செய்வதற்கு முயற்சி எடுத்தது. மிகச் சாதாரண பிரச்சினைகளில் தீர்மானம் எடுப்பதில் கூட அண்ணா அமைச்சரவை மிக ஆறுதலாக நடப்பது போல தோற்றமளித்தாலும், தனது நடவடிக்கைகளில் அமைதியாகவும், அதே நேரத்தில் கவனத்துடனும் அது நடந்து வருகிறது. நிர்வாக இயந்திரத்துடன் எந்தவித தலையீடும் இருப்பதற்கு இடமளிக்கப்படவில்லையென்பதுடன், கடமையே கண்ணாக உழைக்கும் அரசாங்க அதிகாரிகளுக்கு காங்கிரஸ் அரசாங்கத்தைவிட அதிக உற்சாகம் அளிக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

அண்ணா அரசின் மிகவும் பாராட்டப்பட . வேண்டிய ஒருசெயல், மதுவிலக்குக் கொள்கையை உறுதியுடன் கடைப்பிடிக்க அது முடிவு செய்ததே. வருவாயைக் கருதி ஏனைய சில காங்கிரஸ் ஆட்சிக்குட்பட்ட மாநிலங்கள் கூட, மதுவிலக்குக்கொள்கையை கைவிடும் நேரத்தில், அண்ணா தாம் காட்டிய உறுதியின் மூலம், தம்மை ஓர் உண்மையான காந்தீய வாதியென்று நிருபித்துவிட்டார்.

## ரூபாய்க்கு ஒரு படி

ஒரு ரூபாவுக்கு ஒருபடி அரிசி வழங்கும் அண்ணா ஆட்சியின் திட்டம், வேறு யாரும் கற்பனை செய்து பார்க்கக்கூட முடியாத திட்டமாகும். மக்கள் வாங்கக் கூடிய விலைக்கு அவர்களுக்கு கிடைக்கக் கூடியதாக, அத்தியாவசியப் பொருட்களை விற்பதே தமது பொருளாதாரக் கொள்கையென்று அறிவித்ததன் மூலம், வறுமையால் வாடும்கோடிக் கணக்கான மக்களுக்கு தமது விசுவாசத்தை காட்டிக்கொண்டார் அண்ணா.

மத்திய அரசு நிதியுதவி வழங்க முன் வராததாலும், உணவுற்பத்தியில் இயற்கை ஒத்துழைக்க மறுத்ததால் ஏற்பட்ட தோல்வியாலும், தமிழகம் முழுவதற்கும் இத்திட்டத்தை அமுல் நடத்த தி. மு. க. அரசால் முடியாமற் போய்விட்டது. சென்னை' கோயம்புத்தூர், ஆகிய இரு பெரும் நகரங்களில், படியரிசித் திட்டம் அமுல் நடத்தப்படுவதால், அங்கு வாழும் மக்கள் எவ்வளவோ நன்மையடைந்திருக்கிறார்கள்.

## தமிழ் மாநாடு

உலகத்தின் பல பாகங்களிலிருந்து பிரதிநிதிகள் வந்து பங்குபற்றிய உலகத் தமிழ் மாநாட்டை சென்னையில் மிகச் சிறந்த முறையில் நடத்தியதன் மூலம், தி. மு. க. அமைச்சரவை தனது தமிழ் ஆர்வத்தையும், தமிழ் மொழியின் வளர்ச்சியில் கொண்டுள்ள முன்னேற்றத்தையும் வெளிப்படுத்தியது. தமிழ் நாட்டின் வரலாற்றிலேயே இது போன்ற ஓர் விழா நடைபெற்றதேயில்லை. ஒரு மொழி பேசும் மக்கள் தங்கள் மொழி மீது இத்தனை பாசத்தையும் அன்பையும் காட்டிய நிகழ்ச்சி எதுவும் இதற்கு முன் நடைபெற்றதுமில்லை.


தமிழ் நாட்டிலிருந்து இந்தியை வெளியேற்றும் தீர்மானத்தை சட்ட சபையின் பெரும் பான்மை ஆதரவுடன் அண்ணா நிறை வேற்றினார். இது தவிர்க்க முடியாத நடவடிக்கை. இந் நடவடிக்கை எடுக்கப்பட்டிராவிட்டால் தமிழ் நாட்டின் மாணவ சமூகத்தின் அச்சத்தை போக்கி, அவர்களின் உணர்ச்சிகளை கட்டுப்படுத்தி, நம்பிக்கை ஏற்படச் செய்து, படிப்பில் அவர்களது கவனத்தை ஈடுபடுத்தியிருக்க முடியாது.

கடந்த ஓராண்டு ஆட்சியில், தி. மு. க. அமைச்சரவையினர், தம்மை ஆதரித்த மக்களை மட்டுமல்லாது, நடுநிலைமையுடன் இருந்த மக்களையும் தங்கள் நடவடிக்கைகளினால் தம் வசம் திருப்பிவிட்டனர் என்றே கூறவேண்டும்.

# இந்திக்குப் பதில் ஆங்கிலம் தமிழக அரசின் திட்டம் தயார்!

தற்போது தமிழகத்தில் நடைமுறையிலிருக்கும் என் சி. சி. பயிற்சியில் ஆணைகளாகப் பயன் படுத்தப்படும் இந்தச் சொற்களுக்குப் பதிலாக ஆங்கிலச் சொற்களைப் பயன் படுத்த டெல்லி மத்திய அரசு மறுத்துவிடுமானால், என். சி. சி. திட்டத்திற்குப் பதில் மாற்றுத் திட்டமொன்றை தமிழக அரசு தயாரித்திருப்பதாகத் தெரிகிறது; இந்த மாற்றுத் திட்டத்தின் ஆணைச்சொற்கள் ஆங்கிலத்தில் தான் இருக்கும் என்று அறியப்படுகிறது.

மத்திய அரசின் மறுப்புக் காரணமாக மாற்றுத்திட்டத்தைச் செயல்படுத்தி மாநில அரசு நிர்ப்பந்தப் படுத்தப்படுகின்ற சூழ்நிலைக்குத் தள்ளப்படுமானால், அத் திட்டம், என். சி. சி. க்குப் பதில் செயல்படுத்தப்படும்.


எஸ்தர்

என்றும் எழில் காட்டி
அவளுக்கு விளங்கும்மொழி
பேசுகின்ற சேர்ட்டு

எடுப்பான "வசீகரத் தோற்றம் அளித்து!! மங்கையர் விரும்பும் வனப்பும்;பொலிவும் என்றும் தருவது இந்தச் சேர்ட்டேதான்!

இந்தப் புதிய எஸ்தர் சேர்ட்டினைச் சிரமப்பட்டு அழுத்த வேண்டியதில்லை. ஊடாகப் பார்க்கவும் முடியாது. 65% தெத்தரோனும், 35% உயர்ந்த ரக எகிப்திய நூலும் கலந்த துணியிலே தைத்தது. சௌகரியமான நீளமும் அமைப்பும் கொண்டு விளங்குவது! நெடுத்த கையுடனும் குறுகிய கையுடனும் கிடைக்கும்.


DIA ESTER

எஸ்தர் தருவது
எழில் மிக்க தோற்றம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம்-13

# மர்ம மரணம்




எதிர்பார்த்த இன்பம் கிடைக்கவில்லை என்றால் ஏமாற்றம் மட்டுந்தான் ஏற்படும். ஆனால் ஒன்றை எதிர்பார்த்திருக்க அதில்லாமல் போனதுடன் வேறு ஒருபயங்கரம் முன் வந்து நிற்பதென்றால் சாதாரண மனித மனத்தில் எத்தகைய நிலை ஏற்படும் என்று சொல்வதற்கில்லை.

நிர்வாணமாய் வந்த பெண்ணுருவம் நெருங்க நெருங்க சுகந்தியால் மூச்சுக்கூட விட முடியாத நிலை ஏற்பட்டது. தூரத்தில் நிற்கையில் அழகே உருவாகக் காட்சியளித்த அப்பெண்ணுருவம் சமீபித்ததும் அதனைப் பார்ப்பதற்கே கண்கள் கூசின.

நெருப்புக் கோளங்களாகப் பிரகாசித்தன கண்கள். உடலில் ஆங்காங்கு புண்ணிருப்பது போன்று தோற்றமளித்தன. அப்புண்களினால் சீழ் வடிந்து கொண்டிருந்தது. அப்புண்களிலிருந்து வடிந்த சீழ்தான் துர்நாற்றம் வீசியிருக்க வேண்டும்.

மொக்குப் போல திரண்டிருந்த உறுப்புக்களிலெல்லாம் புண் அடையாளங்களுமிருந்தன. அந்த உருவம் சுகந்தியை நெருங்கியதும் இரு கரங்களையும் நீட்டி அழைத்தது.

சுகந்தியும் அதன் அழைப்பை மறுக்காது மந்திரத்தால் கட்டுண்டவளாகச் சென்றாள். உடனே அவள் உடலில் அணிந்திருந்த ஆடையைக் கலைந்து விட்டு அவளை இறுக அணைத்துக் கொண்டது. இரு நிமிடம் என்று சொல்ல முடியாத கண நேரத்தில் சுகந்தி தடாலென நிலத்தில் விழுந்தாள்.

அவள் விழுந்த ஓசை அடங்குவதற்குள் வெளிவாசற் கதவு திறக்கப்படும் ஓசை மீண்டும் கேட்டது. பதுங்கிப்பதுங்கி உள்ளே வந்தான் சுகந்தியின் காதலன் சுந்தரம்.

சுகந்தியின் அறைக் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தவன் நிர்வாணமாய் நிற்கும். அப்பெண்ணுருவைப் பார்த்ததும் சுகந்தியாய்த்தானிருப்பாள் என்று நினைத்த மறு கணத்தில் அப்பெண்ணின் கண்கள் நெருப்புக் கோளங்களாய்க்காட்சியளிப்பதைக் கண்டு பயந்து கீழே பார்த்தான்.

சுகந்தி ஆடையின்றி பேச்சு மூச்சின்றிக் கிடப்பதைப் பார்த்ததும் திடுக்குற்றான். சத்தம் போடுவதற்கு வாயைத் திறந்து பலம் கொண்ட மட்டும் கத்தினான். அவன் கத்திய சத்தம் தொண்டையை விட்டு வெளியே வரவில்லை.

அதற்கிடையில் வெளியே 'கிறீச் கிறீச்' என்ற சத்தம் கேட்டது. அந்த ஒலி சுகந்தியின் அறையை நெருங்கி வந்து கொண்டிருந்தது. யாரோ வருகிறார்கள் என்று நினைத்துத் திரும்பினான் சுந்தரம். அவன் பார்வையில் வர்ண விளக்குகளின் ஒளி வெள்ளந்தான் காட்சியளித்தது. அதைத் தொடர்ந்து எலும்புக் கூட்டின் நடனம். திடீரென நிர்வாணப்பெண்ணைப்பார்க்கத்திரும்பினான். அவளைக் காணவில்லை. பித்துப் பிடித்தவன் போலச் சுழன்று தொப்பென நிலத்தில் வீழ்ந்தான்.

விடியற்காலை வேளை சுகந்தியின் அறையில் யாரோ முனகும் சத்தம் கேட்ட பொழுது சுகுமார் கேட்டுக் கொண்டு படுத்திருந்தான். தொடர்ந்துமுனகல்சத்தம். 'அம்மா பேய், பிசாசு' என்று கத்தும் ஆண்குரல்.

திடீரெனப் படுக்கையிலிருந்து குதித்தெழுந்தான். அவன் அப்படி எழுந்து ஓடுவதைப் பார்த்து விட்டு அவன் மனைவி பத்மாவும் எழுந்து ஓடினாள்.

வெளிக்கதவு திறந்தபடியே கிடந்தது. சுகந்தி அறையில் எரிந்து கொண்டிருந்த 'பெட்றூம் லைட்டையும்' இப்போது காணவில்லை. பயந்து சென்று சுவிட்சைப் போட்டான்.

அறையைப் பார்த்ததும் 'வீல்' எனக் கத்திவிட்டாள் பத்மா. தங்கை நிர்வாணக் கோலத்தில் நிலத்தில் கிடப்பதையும், அவள் சமீபத்தில் சுந்தரம் கிடப்பதையும், சேர்த்துப் பார்த்தபோது சுகுமாரின் உள்ளம் கொந்தளித்தது. அடிமேல் அடி வைத்துத் தங்கையின் அருகில் சென்று அவளைத் தூக்கிப்பார்த்தான்.

அவள் மூச்சு நின்று விட்டிருந்தது. உடல் விறைத்திருந்தது. கண்களின் வெள்ளை விழி கரு நீல நிறமாக மாறியிருந்தது. அவள் எப்படி இறந்திருப்பாள் என்ற எண்ணமே அவன் மனதில் எழுந்தது. அந்தச் சில நிமிட நேரத்தில் சுகுமாரின் உள்ளம் அடைந்த வேதனையை சொல்லுந்தரமன்று. அவன் கண்கள் நீரை உகுத்த வண்ணமிருந்தன.

'பேய்... பிசாசு ... ஐயோ அம்மா பேய், பேய்' என்று முணுகினான் சுந்தரம்.

சுகுமாரின் கவனம் சுந்தரத்தின் பக்கம் திரும்பியது. அவன் உள்ளத்திலுள்ள ஆவேசமெல்லாம் சுந்தரம் மீது திரும்பிய அதே வேளையில் பத்மாவின் விழிகளும் கவனமும் அவனை நோக்கியே திரும்பின.

சுகுமார் எழுந்து கூசாவிலிருந்த தண்ணீரைத் தூக்கி வந்து அவன் தலையில்கொட்டினான். துடிதுடித்து எழுந்தான் சுந்தரம். அவன்சேட் காலரைச்சேர்த்துப்பிடித்து 'டேய் சுந்தரம் என் தங்கையை என்னடா செய்தாய்' என்றான்.

'நான்...நான்...இல் லை... பேய்...பேய்... எலும் ... புக்கூடு' எனப் பிதற்றினான் சுந்தரம்.

'டேய் மடையா என்னடா பிதற்றுகிறாய்' என்று அவன் கன்னத்தில் ஒரு அறை வைத்தான்.

'அம்மா' என்று வீரிட்டலறினான் சுந்தரம்.

'அத்தான் பாவம் அடியாதீர்கள் ஏதோ நடந்திருக்க வேண்டும். அவன் சுய நினைவின்றிப் பிதற்றுகிறான்' என்று கூறித்தடுத்தாள் பத்மா.

வீட்டிற்குள் நடந்த நிகழ்ச்சிகளினால் எழுந்த சத்தங் கேட்டுப் பக்கத்து வீட்டுக்காரர்கள் ஓடி வந்தனர். விடியும் நேரம் ஆகையினால் வெளியே வெளிச்சம் இருக்கவில்லை. ஓடிவந்தவர்களில் ஒருவர் 'ரோச்' கொண்டு வந்திருந்தார். அவர் வாசற் கதவருகில் வட்டமாக இரத்தம் இருப்பதையும் அதன் நடுவில் ஒரு வஸ்து சுருண்டு கிடப்பதையும் பார்த்து 'மிஸ்டர் சுகுமார் இங்கே வாருங்கள்' என்று அழைத்தார்.

சுகுமார் வந்து பார்த்ததும் திகைத்து விட்டான். அவன் உள்ளத்தில் சுந்தரம் கூறிய பேய்—பிசாசு இப்பொழுதுதான் கிலியை உண்டாக்கியது. உடனே பக்கத்து வீட்டுக் காரரிடம் கூறிப் போலிசுக்குப் போன் செய்தான்.

சுகுமாரின் வீடு அமளிதுமளிப் பட்டது. விடிந்ததும் ஜனத்திரள் அவன் வீட்டை முற்றுகையிட ஆரம்பித்தது. பொலிசார் ஜனங்களைக் கட்டுப்படுத்தியதுடன் பேய்—பிசாசுக்கதையும் கூறி மிரட்டியதால் எல்லோரும் மெல்ல மெல்லச் செல்லத் தொடங்கி விட்டார்கள்.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் அருள் நாதனுக்கு ஒன்றுமே புரியவில்லை. சோமசுந்தரம் பங்களாவில் நடை பெற்ற அதே விளையாட்டாக இருக்கின்றது. டாக்டர் சிவகுமாரின் வீட்டில் நடந்தது ஒரு விதமாயிருந்தது. ஆனால் சுகுமாரின் வீட்டில் நடந்திருப்பது ஒரு கொலை.

பேய்—பிசாசுடன் சம்பந்தப்பட்ட வேறு விடயம் என்றால் அவர் மாந்திரீகர்களைக் கூப்பிட்டுக் கவனியுங்கள் என்று கூறிவிட்டு நசுக்காகச் சென்று விடுவார். ஆனால் இது கொலையுடன் பேயோ பிசாசோ சம்பந்தப்பட்டிருக்கிறது.

நினைக்கவே இன்ஸ்பெக்டர் அருள் நாதனின் உள்ளம் நடுங்கியது. அவரால் எதுவும் பேச முடியவில்லை. டாக்டர் பிரேதபரிசோதனைக்காக அழைக்கப்பட்டிருந்தார். புகைப்பட நிபுணர்கள் படங்களைப் பல கோணத்திலிருந்தும் எடுத்துக்கொண்டார்.

டாக்டர் பிரேதத்தை முதலில் பார்த்தவுடன் அவள் எப்படி இறந்திருப்பாள் என்றே கருதினார். அவள் பிணமானவிந்தையை அறிய ஆவல் பட்டார்.

கற்பழிக்கப்பட்டிருப்பாளா எனச் சிந்தித்தார். அதற்கேற்ற பரிசோதனை நடத்த இயலாது. ஆனால் அதற்கான எந்த அறிகுறியும் அங்கு தென்படவில்லை. அவள் உடலைப் புரட்டிப் பார்த்த பொழுது முள்ளந்தண்டின் கீழ்ப்பகுதியில் கண்டல் காயம் போன்று தென்பட்டது. அப்படிபட்ட நூதனமான கொலையையோ, செயலையோ டாக்டர் எங்குமே கண்டிருக்கவில்லை. ஆகவேதான் பெண்ணின் பிணத்தைப் பரிசோதனைக்காக எடுத்துச் செல்ல வேண்டுமென்று கூறினார். அவர் வேண்டுகோட்படியே சுகந்தியின் பிணத்தை எடுத்துச் சென்றனர்.

வீட்டுக் கதவுக்கு முன்பாக இருந்த இரத்தத்தின் நடுவிலிருந்த வஸ்துவை மிகவும் அவதானயாக டாக்டர் எடுத்த போதும் அது 'புஸ்' எனப் புகைந்து போய் விட்டது.

மயக்கம் நீங்கிய சுந்தரத்தை எல்லோரும் பரிதாபமாகப் பார்த்தனர். அவன் எதுவும் பேசமுடியாமல் சம்பந்தமற்ற விடயங்களைப்பேசினான். தொடர்பற்ற சொற்களுக்கிடையில் பேய்—பிசாசு என்று ஏதோவெல்லாம் கூறினான். அவன் புத்தி பேதலித்து விட்டதாகவே இன்ஸ்பெக்டர் அருள் நாதன் கருதினார். ஆகவே அவனை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற அனுமதித்தார்.

யாழ் நகர் எல்லாம் இச் செய்தி தீப்போல் பரவின. பருவ மங்கையின் படுகொலை பற்றிப் பரிதாபப் படுவோர் எவருமில்லை. எல்லோர்மனதிலும் பீதி குடி கொண்டிருந்தது. ஊரெலாம்இதே கதையாகவேல் யிருந்தது.

மணி பத்து அடித்து பத்து நிமிடம் கழிந்திருந்தது. பிரேத பரிசோதனையிலிருந்து டாக்டர் சிவப்பிரகாசம் முகத்தைத் துடைத்துக் கொண்டு வெளியே வந்தார். அவர் கூறிய விடயங்கள் யாவும் அதியிக்கப்படக் கூடியதாகவே இருந்தது. மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்று இன்ஸ்பெக்டர் அருள் நாதன் சிந்தித்தார். கொலையாளி பற்றிய எந்தத் தகவலும் பிரேத பரிசோதனை அறிக்கையில் இல்லை.

முள்ளந்தண்டில் பல்லுப் போன்ற வஸ்துவினால் குத்தப்பட்டிருக்க வேண்டும். இரு துவாரம் காணப்படுகிறது. உடலெல்லாம் இன்னதென்று சொல்ல முடியாத நஞ்சு கலந்துள்ளது. என்ன நஞ்சாகவிருக்குமென்று பரிசோதனை மூலம் அறிய முடியாதிருக்கிறது. கற்பழிக்கப் படவில்லை. ஏக்கத்தினால் இருதயத்துடிப்பு பலமாக ஓடி நின்றிருக்கிறது. இருதயத்துடிப்பு பலமாக இருந்த காரணத்தால் இரத்தம் பூராவும் நஞ்சு பரவிக் கலந்திருக்கிறது. பிணத்தின் மீது இன்னதென்று கூற முடியாத துர்நாற்றம் வீசுகிறது ஆனால் அது பிணத்தின் மணமல்ல. முடிவாகக் கூறுமிடத்தில் இப்பெண்ணின் மர்ம மரணம் பற்றி எதுவுமே கூற முடியாதிருக்கிறது' என்று பிரேத பரிசோதனை அறிக்கையில் டாக்டர் சிவப்பிரகாசம் கூறியிருந்தார்.

மந்திரவாதி மயில்வாகனத்தை அழைத்து அப் பிணம் பற்றிய ஏதும் அறிய முடியுமா என விசாரித்துப் பார்க்க விரும்பினார் இன்ஸ்பெக்டர் அருள் நாதன். அதற்கிடையில் சுந்தரம் அங்கு ஏன் வந்தான்? அவன் தான் அவள் மரணத்திற்கு காரணமாயிருப்பானோ?சுகுமார் அவனைப்பற்றி ஏதும் கூற மறுக்கின்றாரே. இவற்றையெல்லாம் எண்ணிக் குழம்பினார் இன்ஸ்பெக்டர்.

அதே வேளையில் டாக்டர் சிவகுமார் வீட்டில் சுருளியப்பன் டாக்டருக் யாவற்றையும்விளக்கமாகக் கூறிக் கொண்டிருந்தான். அவன் கூறிய கதைகளைக் கேட்டுக் கொண்டிருந்த கீதாவின் நெஞ்சம் 'படக் படக்'என அடித்துக்கொண்டது. டாக்டர் ஏதோ மர்மக்கதை கேட்கும் பள்ளி மாணவன் போல மிக ஆவலுடன் கேட்டுக் கொண்டிருந்தார்.

சுகுமாரின் வீட்டில் நடந்ததாகக் கூறிய கதைகளைக் கேட்ட கீதா அறைக்குள்ளிலிருந்தே டாக்டரை அழைத்தாள். கீதா அறையை விட்டே வெளி வரவில்லை. சுருளியப்பன் எதிரில் போகக் கூடாது என்று டாக்டர் கூறியிருந்தார். ஆனால் சுருளியப்பன் கூறிய கதைகளைக் கேட்ட கீதாவிற்கு பகற் பொழுதானாலும் தனியே இருக்கப்பயமாக இருந்தது. அவள் பூவுடல் படபடவென நடுங்கியது. டாக்டர் உள்ளே எழுந்து சென்று கீதாவுக்கு ஆறுதல் கூறிவிட்டுவெளியே வந்தார். சுருளியன் தன் வீட்டில் நடந்த கதையை ஆரம்பிப்பதற்கு ஆயத்தமாகவிருந்தான்.

'சுருளி! உன்னுடைய கதையைக்கேட்பதற்கே பயமாக இருக்கே' என்றார்.

'என் கதையில்லீங்க டாக்டர். உண்மையாய் நடந்துங்க.ஒரே அமர்க்களமாயிருக்குங்க கச்சேரியடியில். பொலீஸ்காரர்களே பயந்து நடுங்கிறார்கள், எங்க மாந்திரீகர் ஐயா கூறினார் இந்தப் பிசாசு தான் இதெல்லாம் செய்யுதென்று'

'சுருளி உன்னையும் இந்தப் பிசாசுதான் மிரட்டிச்சுதோ. நீ உன் கதையை மறந்து விட்டாய் போலிருக்கே சுருளி! இங்கே மட்டும் இப்படியான கதைகளைக் கதைத்து விடாதே! இங்கே நம்ம அம்மா மிகவும் பயந்தவங்க' என்று கூறிவிட்டு ,அது சரி சுருளி உன் விடயத்தை மிகவும் இரகசியமாகவே கூறு' என்றார் டாக்டர்.

'நாய்களின் சத்தத்தைத் தொடர்ந்து என் வீட்டு விளக்குத் திடிரென அணைஞ்சுதுங்க. உடனே 'கிறீச் கிறீச்' என்ற ஒலி அன்று இடுகாட்டிலே கேட்டுதுங்க என்று சொன்னேனே அதே மாதிரிக் கேட்டுதுங்க. நான் பயத்துலே மயங்கி விட்டேனுங்க' அப்புறமாகக் கண் விழிச்சேன் எனக்கு ஒரே திகைப்பாயிருந்துதுங்க. நான் படுத்த இடத்திலே கிடக்கலீங்க. என் குடிசையிருந்த இடமே தெரியலையுங்க. எல்லாம் ஒரு மாயமாயிருக்குங்க' என்றான் சுருளி.

'சுருளி அப்படியானால் நீஇங்கே தூங்கவேண்டாம்' என்றார் டாக்டர்.

'சுருளியப்பனால் எதுவும் பேச முடியவில்லை. டாக்டரையே பார்த்துக் கொண்டிருந்தான். இரண்டு மூன்று நிமிடம் அப்படி இருந்திருப்பான். டாக்டருக்குப் பின்புறமாக எதையோ உற்றுப் பார்த்து விட்டு 'எசமான் மோகினிப் பேயுங்க.........' என்று கத்திக்கொண்டே தடால் என நிலத்தில் விழுந்தான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களை எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு மாவட்ட சபைகளே தகுந்த பரிகாரம்

## முஸ்லிம் எம். பி. வெளியிடும் கருத்து

“இந்நாட்டின் மூன்ருவது சனத்தொகையைக் கொண்ட முஸ்லிம் மக்களுக்கு மாவட்ட சபை பொருந்தாது என்று கூறுவது அரசியல் அரிச்சுவடி தெரியாதவர்களின் கூற்று. உத்தேச மாவட்ட சபைத் திட்டத்தின்படி மட்டுநகர், திருமலை, மன்னர் முதலிய மாவட்டங்களில் தமிழர்களுடன் சமத்துவமான அதிகாரங்களையும், கல்முனை, புத்தளம், முதலிய மாவட்டங்களில் முழு அதிகாரத்தையும் முஸ்லிம் மக்கள் பெற முடியும்” இவ்வாறு அரசாங்கப் பாராளுமன்றக் குழுவைச் சேர்ந்த முஸ்லிம் எம். பி. யொருவர் சுதந்திரன் நிருபரிடம் குறிப்பிட்டார்.

அவர் மாவட்டசபைகளால் முஸ்லிம்களுக்கு ஏற்படக்கூடியநன்மைகள் பற்றி மேலும்கூறியதாவது—

‘தமிழர்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் ஒரே பிரச்சினைதான் உள்ளது. முஸ்லிம் மக்கள் இந்நாட்டில் காணி வாங்குவதாய் இருந்தால் வாங்குபவரின் பிறப்புப்பத்திரம், தந்தையின் பிறப்புப் பத்திரம், பெற்ருேரின் கலியாணப் பத்திரம் எல்லாம் அணைத்தாக வேணடியிருக்கிறது. இச்சட்டம் ஸ்ரீமா அரசாங்கத்தால் முஸ்லிம் உடமைகளை சிங்கள மக்கள் சுலபமாகவும் குறைந்த விலையில் அமுக்குவதற்கும் முஸ்லிம் மக்களிடம் கூடிய வரிச்சுமையை அறவிடுவதற்குமே கொண்டு வரப்பட்டதாகும்.

இதை அகற்றுவது பற்றி திருமதி சிறீமா கல்முனை தேர்தல் பிரசாரத்திலாவது எதுவித வாக்குறுதியும் கொடுக்கவில்லை.

மாவட்டசபை நிர்வாகத்தில் இப்பிரச்சினைகள் ஒன்றுமே இருக்காது.

கல்முனையிலே இருக்க வேண்டிய கச்சேரியை முழுச்சிங்கள மக்கள் வாழும் அம்பாறை மாவட்டத்திலே அதுவும் கல்முனைத் தொகுதியின் கடைசித் தொங்கலிலே அமைத்திருக்கிறது சிறீமா அரசாங்கம்.

இதனுல் அப்பகுதியில் வாழும் முஸ்முஸ்லிம், தமிழ் மக்களுக்கு ஏகப்பட்ட பொருட் செலவும் தேவையற்ற அலைச்சல்களும் உண்டாவதோடு தங்கள் தாய் மொழியில் முஸ்லிம், தமிழ் மக்கள் கருமமாற்ற முடியாமலிருக்கின்றது.

மட்டக்களப்பு, திருகோணமலை மன்னர் முதலியமாவட்டங்களில் சமத்துவமான அதிகாரத்தையும், கல்முனை புத்தளம் போன்ற மாவட்டங்களில முழுநிறைவு பெற்ற அதிகாரத்தையும் முஸ்லிம் மக்கள் மாவட்டசபைகள் மூலம் பெற முடியும்.

தங்கள் சுய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், நாட்டை அபிவிருத்தி செய்வதற்கும் சமத்துவமானசிக்கனவாழ்க்கைக்கும் மாவட்டசபைகள் பரிகாரம் தேடவல்லது’

## தமிழரசு வெற்றி சு. கட்சி தோல்வி

ஈச்சிலம்பத்தை கிராம சபைத் தேர்தலில் ஒன்பது வட்டாரங்களில் போட்டியிட்ட தமிழரசுக் கட்சி ஆதரவாளர்கள் அனைவரும் வெற்றி பெற்றனர். மூன்று வட்டாரங்களில் தமிழரசு ஆதரவாளருடன் மோதிய சுதந்திரக்கட்சி வேட்பாளர்கள் படுதோல்வியடைந்தது குறிப்பிடத்தக்கது.

# அண்ணவின் ஆலோசனையுடன் மொழிச்சட்டத்துக்கு திருத்தம்?

இந்தி பேசாத மாநில மக்களிடையும் இந்தி பேசும் பகுதியைச் சேர்ந்த மக்களிடையும் மத்திய அரசுத் துறைகளுக்கான பணிகளில் சேருபவர்களுக்கு ஏற்படக் கூடிய மொழிச் சுமையை சமநிலைக்கு கொண்டு வருவதற்கான திட்டத்தை டெல்லி மத்திய அரசு தற்போது பரிசீலனை செய்து வருகிறதாம்.

டெல்லிப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஆட்சி மொழித் தீர்மானத்திஞல், இந்தி பேசாத மாநிலங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதகமான நிலையை நீக்க ஆட்சி மொழிச்சட்டத்தை திருத்த வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்றுக் கொண்டு அந்த அடிப் படையிலேயே இப்பிரச்சினை விவாதிக்கப்பட்டதாக தெரிய வருகிறது.

ஆட்சிமொழிச் சட்டத்துக்கு திருத்தம் கொண்டு வருவதற்கு முன்னர், அது குறித்து தமிழக முதலமைச்சருடன் கலந்து பேசி முடிவு செய்த பின்னர் தீர்மானிப்பதென்று முடிவு செய்யப்பட்டதாக அறியப்படுகிறது.

## அச்சுவேலி கைத்தொழிற் பேட்டை

அச்சுவேலியில் அரசாங்கம் அமைக்க உத்தேசித்துள்ள கைதொழிற் பேட்டைக்கான வேலைகள் ஜூன் மாதம் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

‘எக்கல’ கைத்தொழிற் பேட்டை அமைக்கப்பட்டுள்ள அதே அடிப்படையில் இதுவும் அமைக்கப்படும் என்று தெரிகிறது. அபிவிருத்தி ஆணையாளர் திரு. சி. மயில் வாகனம் இதற்கான ஏற்பாடுகளை கவனித்து வருகிருர்.

# பண்டிதர் இரத்தினத்தின் இரண்டு ஆசைகள்

“என் வாழ்நாளிலே நான் காண வேண்டிய இரண்டு நிகழ்ச்சிகள் இன்னும் உள்ளன. ஒன்று இலங்கையில் தமிழ்மொழி சிங்களத்துடன் சம உரிமைபெறுதல்— மற்றது தமிழ் பேசும் மக்



கள் தம்மைத் தாமே ஆளும் உரிமையைப் பெறுதல்- இந்த இரண்டையும் காண தமிழ் பேசும் மக்கள் ஒன்றுபட்டுழைக்க வேண்டும்”

இவ்வாறு கிளிநொச்சி கந்தசாமி கோயில் முன்றலில் நடைபெற்ற தமிழரசுக்கூட்டமொன்றில் பேசிய கிளிநொச்சிப் பா. உ. திரு. இரத்தினம் குறிப்பிட்டார்.

திரு. இரத்தினம் தமது பேச்சில் மேலும் கூறியதாவது:-

‘எனது வாழ் நாளிலே மறக்கமுடியாத இரண்டு நிகழ்ச்சிகள் இதுவரை நடந்துள்ளன. முதலாவதாக, தமிழக அரசு, தமிழ் நாட்டில் திருக்குறளுக்கும் திருவள்ளுவருக்கும் கொடுத்திருக்கும் பெரு மதிப்பைக் கண்டு மகிழ்ந்தேன்.

இரண்டாவதாக திருவள்ளுவரின் 2000 ஆண்டு நிறைவு விழாவை தமிழக அரசு சிறப்பாக கொண்டாடும் என்பதை இலட்சக் கணக்கானேர் முன்னிலையில் அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் எடுத்துக் கூறியதைக் கேட்டுவகை பெற்றேன். சென்ற 15ஆண்டுகளாக திருக்குறளுக்கும் திருவள்ளுவருக்கும் பெருமை தேட நான் எடுத்த முயற்சிகள் இன்று கனிந்துள்ளன’ என்று கூறினுர்.

# பிரதமரை சந்திக்க தமிழரசார் முடிவு!

அரசாங்க கூட்டுத்தாபனங்களிலும், திணைக்களங்களிலும், வேலையில் சேர்வதற்கு முன் கூட்டியே சிங்கள மொழியறிவு தேவைப்படமாட்டாது என்பதை அரசாங்கம் ஏற்றுக் கொண்ட பின்னரும், சில திணைக்களங்களும், கூட்டுத்தாபனங்களும், சிங்கள அறிவு கோரும் நிபந்தனை விதிப்பதையிட்டு பிரதமரிடம் கடுமையான ஆட்சேபம் தெரிவிக்க தமிழரசார் முடிவு செய்துள்ளனர்.

இது சம்பந்தமாக சகல திணைக்கள அதிகாரிகளுக்கும் திட்டவட்டமான ஓர் சுற்றுநிருபம் அனுப்பும்படியும், அரசாங்க கொள்கையை மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்கும்படியும் அவர்கள் பிரதமரிடம் கோருவர் என்று தெரிகிறது.

## தொண்டமான்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்றுவரை அதை மறுக்கவில்லை? மறுக்காவிட்டால் உண்மை யென்பதுதானே அர்த்தம்? இலங்கையில் அச்செய்தியை மறுக்க அச்சமா? இலங்கைத் தமிழர்களுக்கு ஒருமுகமும் தமிழகத் தமிழர்களுக்கு வேறு முகமும் காட்டுகிறீர்களா?

காஞ்சிக்கு தாம் எழுதிய கடிதத்தில் செல்லையா என்பவர் சுதந்திரன் ‘இந்தியத் தமிழர்’களுக்கு விரோதமானதென்று காட்டமுயன்றிருக்கிருர். இதைப்படித்தவர்கள் கெக்கலி கொட்டிச் சிரித்திருப்பார்கள்.

### பிரிவினை செய்தது யார்?

இலங்கைத் தமிழர்களை, இந்தியத் தமிழரென்றும், யாழ்ப்பாணத் தமிழரென்றும், பிரித்து பிளவுபடுத்தி அதனுல் அரசியல் லாபம் காண முயலும் தொண்டமான்களையும் பொன்னம்பலங்களையும் சாடி, இலங்கையில் ஒரே தேசிய இனமாக தமிழினத்தை கட்டியெழுப்பும் திருப்பணியில் சுதந்திரன் ஈடுபட்டு வருவதை தமிழ் கூறும் உலகம் முழுவதும் நன்கறியும்.

### வேண்டாம் வீண் வேலை

தோட்டத் தமிழர்களை ‘இந்தியத் தமிழர்’ ஆக வைத்துக் கொண்டே அரசியல் பிழைப்பு நடத்த முயற்சிக்கும் இ. தொ. கா. வின் குட்டை உடைத்து தோட்டத் தமிழர்கள் இந்தியத் தமிழர்களல்ல; அவர்கள் மலையகத் தமிழர்கள்; இந்நாட்டின் இரத்தத்தோடு இரத்தமாக சதையோடு சதையாக கலந்த இலங்கைத் தமிழர்கள் என்றுதான் சுதந்திரன் எப்போதும் கருதி வருகிறது.

ஆகவே, இ. தொ. கா. தலைமையை கேட்டுக்கொள்ளுகிறோம் - சுதந்திரனில் உங்களைப்பற்றி ஏதாவது தவருன செய்தி வெளிவந்தால் மறுப்பு அனுப்புங்கள்! பெருந்தன்மையுடன் வெளியிடுவோம். அதை விட்டு சுதந்திரனுடன் முட்டி மோதி இருக்கின்ற கொஞ்சநஞ்ச செல்வாக்கையும் இழந்துவிடவேண்டாம்.

இதோ ஒரு தலைசிறந்த வாய்ப்பு!

சு த ந் தி ர ன்

★ நியாயமான கட்டணத்தில்...
★ குறித்த நேரத்தில்...
★ கவர்ச்சியான அமைப்பில்...
★ திறமையான வேலைப்பாட்டுடன்...
★ சகல அச்சுவேலைகளும் உடனுக்குடன் செய்து கொடுப்போம்.

அச்சகம்

சுதந்திரன் அச்சகத்துக்கு நீங்களும் ஒரு சந்தர்ப்பத்தை ஏன் கொடுக்கக் கூடாது?

20 ஆண்டுகளாக பணியாற்றி வரும் அச்சகம்.

194ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு - 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 சத சம்பள உயர்வு ஒப்பந்தத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கு தொண்டமான் செய்த துரோகம்!

## அம்பலப் படுத்துகிறார் இ. தொ. க. பிரமுகர்

'மலைநாட்டு தேயிலை றப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு, அந்த சலுகைப் பெற்றுத் தந்துள்ளோம், இந்த சலுகை பெற்றுத்தந்துள்ளோம் மலைநாட்டு தோட்ட தொழிலாளர் மக்களுக்காக நாங்கள் உழைக்கிறோம், ஆசியாவிலேயே எங்களுடைய தொழிற்சங்கம் தான் பெரிது, பலம் வாய்ந்தது என்று தம்பட்டம் அடித்துக் கொள்ளும் தம்பிரான்கள் கூட்டு ஒப்பந்தம், இந்த ஒப்பந்தம், அந்தஒப்பந்தம் என்று முதலாளிமார் சம்மேளனத்துடன் பல ஒப்பந்தங்களை செய்து கொண்டு அப்பாவி தோட்ட மக்களை கஷ்டத்திற்குள்ளாக்கி மேளனத்தோடு, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. தொண்டமான் செய்து கொண்ட, தேயிலை ரப்பர் தோட்ட தொழிலாளர்களின் பத்து சத சம்பள உயர்வு, கூட்டு ஒப்பந்தத்திலே, (ஆ பகுதி) தேயிலை — இறப்பர், பயிரிட்டு பதனிடும் தொழில்கள் என்ற தலைப்பின் மூன்றாவது சரத்தான ஒய்வு கால உபகாரத் தொகையில், திரு. தொண்டமான் அவர்கள் ஏழைத் தொழிலாளரின் அடிவயிற்றில் அடித்துள்ளார்.

இந்த சரத்தை உங்களுக்கு கொஞ்சம் விளக்கி கூறுகிறேன், அதாவது, 55 வயது பூர்த்தி யடைந்து, தோட்டம் விட்டு போகும், அல்லது இந்தியா திரும்பும் 35 வருடகால சேவை புரிந்துள்ள ஒரு ஆண் தொழிலாளிக்கு தோட்ட நிர்வாகத்தால் கொடுக்கும் அதிகப்பட்ச தொகை ரூபா 1080-00 ஆகும். 50 வயது பூர்த்தியடைந்த 30 வருட சேவை புரிந்துள்ள பெண் தொழிலாளிக்கு ரூபா 900-00 ஆகும்

இந்தத் தொகையை கணக்கிடும் பொழுது சேமலாப நிதிக்கு முதலாளியால் செலுத்தப்பட்ட தொகை கணக்கெடுக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது, இங்கு தான் விசயம் உள்ளது.

35 வருட காலம் சேவை புரிந்து 55 வயது பூர்த்தியாகி, இந்தியா திரும்பும், அல்லது தோட்டம் விட்டு போகும் ஒரு நபருக்கு கொடுக்க வேண்டிய ஒய்வு கால உபகாரப்பணம் ரூபா 1080-00 ஆகும், ஆனால் மேற்படி நபருக்கு ரூபா. 600-00 சேமலாப நிதிப் பணம் இருந்தால், இதில் முதலாளி செலுத்திய 6 வீதம், அதாவது ரூபா 400-00 ஒய்வு கால பணத்திலேயே கழிக்கப்பட்டு மிகுதி ரூபா 680-00 தான் கொடுக்கப்படும், ஆனல் இந்த ஒப்பந்தத்திற்கு முன் இவ்வாறில்லை.

இவ்வாறான ஒப்பந்தத்தை முதலாளிமார் சம்மேளனத்தோடு செய்துகொண்டதால்தான், கடந்த வருட இறுதியில் நடைபெறவிருந்த தோட்டத் தொழிலாளர்களின் வேலை நிறுத்த போராட்டத்தை வாபஸ் வாங்க வேண்டிய நிலைமை திரு. தொண்டமானுக்கு ஏற்பட்டது என்பதை யாரும் மறுக்க முடியாது''.

மேற்படி கூட்டத்தில் பன்விலை மாவட்டப் பிரதிநிதி திரு. எஸ். முத்தையா, மாவட்டத் துணைப் பிரதிநிதி திரு. ப. நந்தகோபால், திரு. பாலகிருஷ்ணன், ஆகியோர்கள், உரையாற்றிய பின் நடப்பு வருடத்திற்கு பின் வருவோர், உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டார்கள்.

தலைவர்: திரு. வி. சுப்பையா, உபதலைவர்: திரு. எஸ். சுப்பையா, செயலாளர்: திரு. எம். பி. குமாரவேல், துணைச் செயலாளர்: திரு. எஸ். முருகையா, பொருளாளர் திரு. எஸ். மாடசாமி, இணைப்பொருளாளர்: திரு. வி. வடிவேல்.

வா. மு. தலைவர்: திரு. எம். வேலு, வா. மு. செயலாளர்: திரு. எம். ஆறுமுகம், வா. மு. பொருளாளர்: திரு. எஸ். சண்முகம்.

மா. மு. தலைவி, திருமதி. ஆர். செல்வம், மா. மு. உபதலைவி. திருமதி. பி. கறுப்பாய், மா. மு. செயலாளர்: திருமதி. சிவபாக்கியம்.

## மலையகத்திலே........

அவர்களுக்கு கொடுக்கப்பட்ட ஒரு சில உரிமைகளையும் காட்டிக் கொடுத்து மறித்துக் கொண்டு அதற்கு நஷ்ட ஈடாக செக் ரோலில் சந்தா வசூலித் தெடுக்கின்றனர்'

இவ்வாறு கண்டி மெதமாநுவரையைச் சேர்ந்த தேசிகொலை தோட்டத்தில் நடைபெற்ற இ. தொ. கழக தேர்தல் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசிய பன்விலை இ. தொ. கழக மாவட்டத்தலைவர் திரு. எஸ். அங்கமுத்து கூறினார்.

அவர் மேலும் பேசிய பொழுது கூறியதாவது-

கடந்த வருடம், 1967, ஏப்ரல் மாதம் 23ம் திகதி தோட்ட முதலாளிமார் சம்

## அக்கரபத்தனை தமிழ் மாணவருக்கு அநீதி! தமிழ்த்தலைவர்கள் நடவடிக்கையெடுப்பரா?

சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினர் திரு. நவரத்தினம் அவர்களுடைய நன் முயற்சியினால் கடந்த பல ஆண்டுகளாக ஒரு தமிழ் பாடசாலை இல்லாத குறையை (எங்கள் பகுதியாகிய அக்கரைப் பத்தனை வாழ் மக்களுக்கு ளுக்கு நீக்கி தந்தார் கடந்த வருடம் மேமாத மத்தியில். இன்று அந்த பாடசாலையின் ஓராண்டு பூர்த்தி அடையும் தருவாயில் 'சுதந்திரன்' மூலம் சிலவற்றை அம்பலப் படுத்துகின்றோம்!

அ. த. க. பாடசாலை தமிழ் வகுப்பு பின்நேரம் ஒரு மணிக்குப் பின் ஆரம்பமாகும். அதற்கு முன்னர் காலை எட்டு மணி தொட்டு சிங்கள வகுப்பு நடைபெறும். இந்த வருடத்தில் அந்த வித்தியாலயத்திற்கு மற்றொரு புதிய கட்டிடமும் திறக்கப்பட்டது.

ஆனால் இங்கு ஒரு அரசாங்க பாடசாலை கட்டியதே ஒரு தமிழன்: அதாவது அக்கரப்பத்தனை தபால் கந்தோர் முன்னை நாள் அதிபர் திரு. கார்த்திகேசு என்பவரினல் 1956-ம் ஆண்டுக்கு முன் கட்டப்பட்டு அப்போதைய பிரதமர் திரு. கொத்தலாவலை அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அதற்கு பின் அது சிங்களவர் சொந்தமாகிவிட்டது.

யில் அமர்ந்து படிக்கும் நிலையில் இன்று தமிழ் பிள்ளைகள் இருக்கின்றார்கள்.

புதிய கட்டடத்தில் புதிய தளவாடங்களை பூட்டி மாலை நேரத்தில் சிங்கள மாணவர்கள் ஒருசிலர் வகுப்பு நடத்துகின்றார்கள். இப்படியொரு நீதி எந்த சனநாயக நாட்டிலும் உண்டா?

எக்காரணத்திற்காக அந்த புதிய கட்டிடத்தில் தமிழ் பிள்ளைகளின் மாலை

## மக்கள் குரல்

இப்பொழுது மாலைநேரத் தமிழ் வகுப்பிற்கு இரண்டு பழைய கட்டிடங்களே விடப்பட்டுள்ளன. அந்த கட்டிடங்களில், இடிந்த சுவரும், குழிவிழுந்த தரையும் உடைந்த நாற்காலிகளும் உழுத்துபோன மேசைகளும் உபயோகிக்க முடியாத தளவாடங்களும் தான் உண்டு. அத்துடன் இடவசதி குறைவு. இரண்டு மாணவர்கள் ஒரு நாற்காலி நேர வகுப்பு மறுக்கப்படுகின்றது? தமிழர்கள் எருமைகளா? காலை வகுப்பு நடத்தும் ஒரு சில சிங்கள மாணவர்கள் தூண்டிவிட்ட துவேசிகளுக்கு சொந்தமா? யாருக்கு சொந்தம் அப் புதிய கட்டிடம்? தமிழ் தலைவர்கள் இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

—கேயெஸ்,

அக்கரபத்தனை.

## உதவியில்லாவிடினும் உபத்திரவம்செய்யாதீர்

யாழ்ப்பாணப்பாராளுமன்ற உறுப்பினர் ஐ. நா. புகழ் திரு. ஜீ. ஜீ. அவர்கள், கல்முனை இடைத்தேர் தலையிட்டு, காரைநகர் தமிழ் காங்கிரஸ் பொதுக் கூட்ட மொன்றில் பேசும் போது, கல்முனை வாழ் தமிழ் பேசும் மக்கள் மாவட்ட சபையை ஏற்கவில்லையென்று, கூறியதாக பத்திரிகைச் செய்தியொன்று வந்தது.


அதே மாவட்ட சபையை, முஸ்லீம், மக்களும் நிராகரித்து விட்டார்கள் என்று பதியுதீன் உட்பட எதிர்க் கட்சி தலைவி வரை கூறுகின்றார்கள். அவர்கள் இரு பகுதியார் சொல்லும் கருத்து உண்மையாயின், தமிழரசுக் கட்சிக்கு வாக்களித்த சுமார் 10000 வாக்காளர்களும்பறங்கியர்களா? அல்லது சிங்களவர்களா? என்று கேட்க விரும்புகின்றேன்.

தமிழ் பேசும் மக்களுக்கு கிடைக்கும் உரிமைகள், தங்கட்கு நேர்மாறான கட்சியால் கிடைக்கப் போகின்றதே என்ற எரிச்சல் காரணமாக விதண்டா வாதம் பேசாமல் உதவி இல்லா விட்டாலும் உபத்திரவம் கொடுக்க வேண்டாம் என்று தமிழ் மகன் என்ற முறையில் கேட்டுக்கொள்கின்றேன்.

—கி. திருவருள்,

(சுருவிலூரான்)

கொழும்பு.



பாட்டாளி முதல் பணக்காரன் வரை
எல்லோரும் புகைப்பது
கமலா பீடி
ஒரு முறை வாங்கி உபயோகித்தால அதன் உண்மை விளங்கும்
கமலா ஸ்டோர்ஸ்,
தந்தி: தாமரை
நிர். 15, செட்டியார் தெரு
கொழும்பு-11
3597—6522

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் வீட்டுக்காரர் எம். ஜி. ஆர். பிள்ளை வீட்டுக்காரர் விநாயகம்

## சட்ட சபையில் எழுந்த சம்பந்தி சண்டை

**மக்கள் திலகம் எம் ஜி.ஆரும், சென்னைச் சட்ட மன்ற காங்கிரஸ் கொறடா திரு. விநாயகமும் சம்பந்திகளாம். இத்தகவலை திரு. விநாயகமே சட்டமன்றத்தில் அண்மையில் தெரிவித்தார். அதிர்ச்சியாயிருக்கிறதா? மேலே படியுங்கள்! அதிர்ச்சி நீங்கி விழுந்து விழுந்து சிரிப்பீர்கள்!**

சென்னையில் 1967ல்வன விலங்குகள் வாரத்தை யொட்டி நடந்த விலங்குகள் ஊர்வலம்பற்றி, சட்ட மன்றத்தில், காங்கிரசுக் கொறடா திரு. கே. விநாயகம் கேட்ட கேள்வியும், அதற்கு அமைச்சர்கள் அளித்த பதில்களும் அவையினருக்கு நகைச்சுவையை அளித்தன.

கே. விநாயகம்: 'மிருகக் காட்சி சாலைக்கு நான் ஒரு சிறுத்தையை அளித்திருக்கிறேன்; அது ஆண் சிறுத்தை; இந்த அவையின் உறுப்பினரான எம். ஜி. இராமச்சந்திரனும் ஒரு சிறுத்தை அளித்திருக்கிறார்; அது பெண் சிறுத்தை; அந்த இரண்டு சிறுத்தைகளும் காதலித்து, குட்டிகளையும் ஈன்றெடுத்துள்ளன. அந்த இரண்டும் இப்போது ஒன்றையொன்று சந்திக்க முடியாமல் பிரித்து வைக்கப் பட்டிருக்கின்றன; அதனால் அவை மனமொடிந்திருக்கின்றன.

'அது ஒருபுறமிருக்க, அப்போது நடந்த ஊர்வலத்தில், என்னுடைய ஆண் சிறுத்தையை விட்டு விட்டு, எம். ஜி. இராமச்சந்திரனின் பெண் சிறுத்தையை மட்டும் கொண்டு வந்தது நியாயமா?' (சிரிப்பு)

அமைச்சர் ஏ. கோவிந்தசாமி: 'திரு. விநாயகம், ஆண் சிறுத்தை ஒன்றைக் கொடுத்தார் என்பது உண்மை; ஆனால் அது, நடமாடக்கூடச் சக்தியற்ற நிலையில் வயதாகி, படுத்த படி கிடக்கிறது.' (சிரிப்பு)

கே. விநாயகம்: 'என்னுடைய சிறுத்தைக்கு ஒன்றும் அவ்வளவு வயதாகவில்லை; அது நன்றாகத்தான் இருக்கிறது; எம். ஜி. ஆர். அவர்களின் பெண் சிறுத்தை தான் 50—60 வயதாகி, படுத்திருக்கிறது.'

அண்ணா: 'இந்த விஷயத்தைப் பற்றி இரண்டு சம்பந்திகளும் கூடிப் பேசி ஒரு முடிவுக்கு வரலாம்.'

(பலத்த சிரிப்பு)

---

# திரைவாணன் பதில்கள்

கு. ராமஜெயம்
பட்டியகமபஜார்

கே:- பத்மினி திருப்பதியில் உருண்டு பிரார்த்தனை செய்தாராமே!

ப:-இதெல்லாம் அவருக்கு சகஜம். அவர் வாழ்க்கையில் பலமுறை உருண்டு புரண்டவராயிற்றே!

கே:- சில சினிமா நடிகைகளுக்கு உடம்பு பெருத்துப் போகிறதே ஏன்?

ப:- பணம் சேர சேர உடல் பெருப்பதில் ஏது ஆச்சரியம்?

ஃ

செல்வி. கே. ஜெயம்
பட்டியகமபஜார்

கே: நீச்சலுடையில் நடிப்பவர்கள் எல்லாம். முத்தக் காட்சியில் நடிக்க ஒப்புக் கொள்வார்களா?

ப: அறநனைந்தவனுக்கு கூதலென்ன குளிரென்ன?

கே: புது நடிகைகளில் உங்களுக்குப் பிடித்த நடிகை யார்!

ப: கே. ஆர். விஜயாவுக்கு பிறகு எனக்குப் பிடித்தமான புதிய நடிகைகள் இன்னும்தோன்றவில்லை.

ஃ

ஏ. மோகினி,
பருத்தித்துறை.

கே: வையமெல்லாம் புகழும் புரட்சி நடிகர் எம். ஜி. ஆருக்கு கார் ஓட்டத் தெரியாது என்று சொன்ன உம்மை, கழுத்தை நசித்துக் கொன்றதாகக் கனவு கண்டேன். இதற்கு நீர் என்ன சொல்கிறீர்?

ப: என் கழுத்தை நெரித்துக்கொன்றால் மட்டும் உண்மையை அழித்துவிட முடியுமா? ஒருவருக்குக் கார் ஓட்டத் தெரியாவிட்டால் அதில் என்ன இழுக்கு இருக்கிறது.

ஃ

செ. யோகதாஸ்
திருமலை

கே: தமிழகத்தில் தீபாவளிக்கு திரையிட்ட படங்களில் தொடர்ந்து ஓடிக் கொண்டிருக்கும் படம் எது?

ப: நான்!

ஃ

தாளையூர்
முருகுப்பிள்ளை
தாழங்குடா.

கே: ஜெயலலிதாவுக்குத் திருமணம் ஆகிவிட்டது என்று சொல்லுகிறார்களே உண்மை தானா?

ப: அப்படியா, நான் கேள்விப்படவில்லையே!

ஃ

எஸ். எம். சாம்பிளவர்ணம்
ஆலி-எல.

கே: ரவிச்சந்திரன் ஜெய்சங்கர் இருவருள் சண்டையில் யார் சிறந்தவர்?

ப: தமிழ்த் திரையின் ஜேம்ஸ் பாண்ட் ஜெய் சங்கர்தான்!

ஃ

ஜோ. கி. ராஜன்,
திருகோணமலை.

கே: தமிழகத்தில் ஓடிக் கொண்டிருக்கும் 'குடியிருந்த கோயில' படம் வசூலில் 'எங்க வீட்டுப் பிள்ளை' யை மிஞ்சுமா?

ப: வாய்ப்பில்லை!

ஃ

கே. கணேசன்,
கிளிநொச்சி.

கே: படகோட்டி சினிமாப் படம் வெளிநாட்டில் ஓடியதுண்டா இலங்கையைத் தவிர?

ப: மலேசியாவில் ஓடியுள்ளது.

திரைவாணன்
சுதந்திரன்
கலைப் பூஞ்சோலை
த. பெ. இல. 1183
கொழும்பு.

---

நாடக விமர்சனம்

# நவக்கிரகம்

பட்டதாரி மாணவர்கள் அளிக்கும் நாடகமென்றால் அதில் சிந்தனையைத் தூண்டும் சீரிய கருத்துக்கள் சமுதாய வளர்ச்சிக்கேற்ற வளமான எண்ணங்கள் இருக்கும் என்று நாடக அபிமானிகள் கருதிய ஒரு காலம் மூன்பு இருந்தது. இந்தக் கண்கொண்டு நோக்குமிடத்து சென்றமாதம் 27, 28ம் திகதிகளில் இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்ச்சங்கம் (கொழும்பு) அளித்த 'நவக்கிரகம்' என்னும் நாடகம் ஒரு ஏமாற்றம் என்றே சொல்ல வேண்டும்.

கல்வியங்காட்டைச்சேர்ந்த தரகர்வெள்ளி அம்பலத்தின் குடும்பத்தினர் கறுவாக் காட்டுவீடொன்றில் குடியேறிச்சிறிது காலம் தங்கிவிட்டு வெளியேறுகின்றனர் — இது தான் கதை. ஏன் குடியேறினர், ஏன் வெளியேறினர் —இது தெரியாது. இடையில் தரகர் தம்பிராசா வந்து போகிறார். ஆறிம்பாய் வந்து போகிறார். ஜெகன் வந்து ரேடியோவில் ஒரு பாட்டைப் கேட்டு ரசித்துவிட்டுப் போகிறார் —ஏனென்று தெரியாது;

நடிப்பைப் பொறுத்தமட்டில் தரகர் வெள்ளிஅம்பலத்தின் மனைவியாக நடித்த செல்வி சபாரத்தினம் பாத்திரத்துடன் கலந்து விட்டார் என்றால் மிகையாகாது.

தரகர் வெள்ளியம்பலமாக நடித்த எஸ். சிவக்குமாரன் தான் ஒரு சிறந்த நடிகர் என்பதை நிரூபித்து விட்டார். குறிப்பாக இவர்களிருவரும் பொதுவாக ஏனைய நடிகநடிகைகளும் தமது சிறந்த நடிப்பால் நாடகத்தில் அலுப்புத் தட்டாதவாறு காப்பாற்றி விடுகிறார்கள்.

நாடக இறுதியில் பே (ஏ) சிய கதை வசனகர்த்தாவும் இயக்குநருமான கே. எம். வாசகர் பத்திரிகைகளையும் இலங்கை வானொலி நாடக விமர்சகர்களையும் ஈழத்தின் இதர நாடகத் தயாரிப்பாளர்களையும் கடுமையாகத் தாக்கிப் பேசினார்.

இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்சங்க மேடையில் இத்தகைய பேச்சுக்களுக்கு இடமளிக்கப்பட்டது எப்படி என்ற கேள்வி எழுகின்றது.

தற்புகழ்ச்சியும் பிறர்கண்டனமும் கலையை வளர்க்க உதவமாட்டா. நிறைகுடம் தளும்பாது.

---

# "விவசாயி"

## இலவச சினிமாப் போட்டி

சுதந்திரன் வாசகர்களுக்கு இப்பொழுது சிலோன் என்டர்டெயின்மண்ட்ஸ் திரைகளில் காட்சியளித்துக் கொண்டிருக்கும் 'விவசாயி' படத்தை இலவசமாகப் பார்ப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் கீழே கேட்கப்பட்டிருக்கும் கேள்விகளுக்கு அதிலேயே மறுமொழியை எழுதி நமக்கு அனுப்பி வைக்க வேண்டியதுதான். சரியான விடையனுப்பும் அதிர்ஷ்டசாலியான 6நேயர்களுக்கு பரிசு டிக்கெட்டுகள் அனுப்பி வைக்கப்படும்.

## முடிவு திகதி 30-4-68

விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:—
போட்டி ஆசிரியர்,
கலைப் பூஞ்சோலை,
த. பெ. இல. 1183,
கொழும்பு.

### பரிசு விபரம்

1-வது பரிசு — 6 மேல்வகுப்பு டிக்கெட்டுகள்
2-வது பரிசு — 4 மேல்வகுப்பு டிக்கெட்டுகள்
3-வது பரிசு — 3 மேல்வகுப்பு டிக்கெட்டுகள்
4ம், 5ம், 6ம் இடங்களைப் பெறுபவர்களுக்கு தலா இரண்டு மேல் வகுப்பு டிக்கெட்டுகள் வீதம் வழங்கப்படும்.

சிலோன் என்டர்டெயின்மெண்ட்ஸ் ஸ்தாபனத்தாரே பரிசுகளை அளிப்பதற்கு முன்வந்துள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

............................இங்கே வெட்டுக............................

1. எம். ஜி. ஆர். துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் பின்னர் முதன் முதல் நடித்த தேவரின் படமெது?
..................................................
2. விவசாயி படத்தில் இதற்கு முன் இணையாத இரு ஜோடிகள் இணைந்து நடித்துள்ளனர். அந்த ஜோடிகள் யார்?
..................................................
3. இந்தியாவில் எத்தனைவித ரகமான நெல் உண்டு. என்று கூறுகிறார் எம். ஜி. ஆர்?
..................................................
4. விவசாயி படத்தில் எத்தனை சண்டைக்காட்சிகள் வருகின்றன?
..................................................
5. விவசாயி படத்தில் எம். ஜி. ஆருக்கு அப்பாவாக நடித்திருக்கும் நடிகர் இதற்கு முன் அப்படி ஏதாவது படத்தில் நடித்திருக்கிறாரா?
..................................................
6. சிலோன் என்டர்டெயின்மெண்ஸ் திரைகளில் விவசாயிக்கு முன்பு திரையிடப்பட்ட ஓர் படத்தில் எம். ஜி. ஆரும். கே. ஆர். விஜயாவும் இணைந்து நடித்துள்ளார்கள் அதன்பெயரென்ன?
..................................................

.................... ....................................
திகதி கைெயொப்பம்

பெயர்:........................................
முகவரி:........................................
..................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈடிணையற்ற மகத்தான 3-வது வாரம்!

**சென்ட்ரல்** (மருதானை) **நவா** (கொம்பனித்தெரு) ராணி (யாழ்நகர்) ராஜேஸ்வரா (மட்டுநகர்)
லிபர்ட்டி (ஹட்டன்) றெக்ஸ் (பதுளை) ஜோதி (திருமலை) மீபுர (நீர்கொழும்பு)



தனி ஒருவனுக்கு உணவில்லை யெனில் ஜெகத்தினை அழித்திடுவோம்!
நமது நாடு பழம் பெரும் விவசாய நாடு! அதிக உணவு பயிரிடுக!
அதுவே நாட்டின் அவலக்குரல்!

படித்த விவசாயியாக **எம். ஜி. ஆர்.** நாகரீக சேலை கட்டும் மங்கையாக **கே ஆர் விஜயா**
கணவனை-தங்கையா எனத் தத்தளிக்கும் **விஜயகுமாரி** மற்றும்
★ எம். என். நம்பியார், ★ நாகேஷ் ★ மனோரமா
★ எஸ். ஏ. அசோகன் ★ வி. கே. ராமசாமி நடித்த
தேவர் பிலிம்ஸ்

டைரக்ஷன் **எம். ஏ. திருமுகம்**

# விவசாயி

## 2வது-ஜனத்திரள் வாரம்!

செல்லமகால் (கொட்டாஞ்சேனை) ஈரோஸ் (பாமன்கடை) நெல்சன் (திருமலை) வின்சர் (யாழ்நகர்)
இம்பீரியல் (மட்டுநகர்) அசோகா (புத்தளம்) றீகல் (நீர்கொழும்பு) தாஜ்மகால் (மாத்தளை)
கிங்ஸ் (பதுளை)



**பாலையா, முத்துராமன், சுந்தரராஜன்,
நாகேஷ், சௌகார் ஜானகி, ராஜஸ்ரீ, காஞ்சனா
நடிக்கும்**

# பாமா விஜயம்

## 7வது வெற்றி வாரம்
கெயிட்டி திரையில்

# குலேபகாவலி

## குதூகலமான 2-வது வாரம்!



கெப்பிட்டல் (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) மைலன் (கொழும்பு) விஜயா (மட்டுநகர்)
ராஜ் (நீர்கொழும்பு) வெம்பிளி (கண்டி) மனில் (மொறட்டுவ) சிறிகிருஷ்ணா (திருமலை)
மொடேன் (பண்டாரவளை) விஜிதா (அட்டன்) நியூசினிமா (குருநாகல்) லட்சுமி (இரத்தினபுரி)

**எம்.ஜி. ஆர்., சரோஜாதேவி, அசோகன்,
சௌகார்ஜானகி, தங்கவேலு, பாலையா நடிக்கும்**

# பெற்றால் தான் பிள்ளையா?

## 7வது வெற்றி வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) சந்தியா (கம்பளை) மொடேன் (பதுளை)
தீவொளி (நூரளை) விஜிதா (மஸ்கெலியா)

# சரஸ்வதி சபதம்


இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194, ஏ, இலக்கத்தில் 1968-ம் வருடம் ஏப்ரல் மாதம் 19-ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப்பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org